தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : ௫௮ மலர் : ௪

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு : ௨௲௧௩, - துந்துபி ஆடி
(1982 சூலை - ஆகஃச்டு)

MALLIKA ARTS

தொழிற்றொண்டர் :
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ௫௯] [மலர்: ௩

உள்ளுறை: பக்கம்

1. வ. உ. சி. யின் இலக்கியப் பணிகள் ... 145
திரு. மா. ரா. அரசு, எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை-2.

2. பாரதி பரமஞானி ... 160
K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,
தஞ்சை.

3. தமிழில் சந்தப் பாடல்களின்
தோற்றமும் வளர்ச்சியும் ... 171
மா. சற்குணம், எம். ஏ.,
மயிலம்.

4. அழன் ... 175
பெ, சுயம்பு,
மொழியியல் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

5. இலக்கிய இலக்கண வினா-விடை 180

6. வெண்பாப் போட்டி ... 182

7. பிழை திருத்தம் ... 187

8. உலா இலக்கிய மகளிர்—ஓர் ஆய்வு ... 189
அரங்க. நலங்கிள்ளி,
ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உ௲கங துந்துபி—ஆடி 1982 சூலை—ஆகஃஃச்டு	மலர் ச

தமிழ் வாழ்க

வ. உ. சி. யின்†

[இலக்கியப் பணிகள்]

மா. ரா. அரசு, எம். ஏ.,

முன்னுரை :

வ உ. சி. என்றதும், அவர் கப்பலோட்டியதும் செக்கிழுத்ததுமே நினைவிற்கு வரும். வ. உ. சி, போராட்ட வீரராகவே, விடுதலை வேள்வியின் தொடக்ககால அரசியல் தலைவராகவே மக்கள் நடுவே பெருமளவு அறிமுக மாகியுள்ளார்.

அவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர் என்பதோ, தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சி உடையவர் என்பதோ, தமிழில் பல துறைகளிலும் உழைத்து, சாதனைகள் பல நிகழ்த்தியவர் என்பதோ நாட்டுணர்வோடு மொழியுணர்வும் நிறைந்தவர் என்பதோ பலர் அறியாதன.

இக் கட்டுரையின் நோக்கம், அறிஞர் வ. உ. சி.யை — கவிஞர் வ. உ. சி. யை — எழுத்தாளர் வ. உ. சி. யை — சொற்பொழிவாளர் வ. உ. சி. யை நினைவு கூர்வதாகும்.

---

†சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறையின் 59-ஆவது வாரக் கருத்தாய்வரங்கில் 16—11—'81 அன்று நடந்த வ. உ. சிதம்பரனார் நினைவுநாள் விழாவில் படிக்கப்பட்டது.

பகுப்பு:

வ. உ. சி. யின் வாழ்க்கையை மூன்று கால கட்டங்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர் ஆற்றிய இலக்கியப் பணிகளை அறிமுகம் செய்வதே விழைவு. சிறை செல்லும் முன், சிறையில் இருந்த காலம், விடுதலைக்குப்பின் என்று அவற்றை வகைப்படுத்தலாம்.

சிறை செல்லும் முன் (1898-1907):

இந்தக் காலக் கட்டத்தில் வ. உ. சி. சொற்பொழிவாளராக— கட்டுரையாளராக — கவிஞராக நமக்கு அறிமுக மாகிறார். வ. உ. சி.யின் இலக்கியப் பணிகளின் தொடக்க காலமாக இதைக் கொள்ளலாம்.

சொற்பொழிவாளர்:

வ. உ. சி யை முதன் முதலில் சொற்பொழிவாளராகவே காண முடிகிறது. 1898-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் பத்தாம் நாள் வ. உ. சி.யின் சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலேயே அவருடைய முதற் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. அப்போது அவருக்கு வயது இருபத்தாறு.

சென்னையில் அந்நாளில் (டிசம்பர், 1898) கூடுவதாக இருந்த பதினான்காவது காங்கிரசு மகாசபையின் கூட்டம் தொடர் பான செயல்முறைகளைப் பற்றிப் பேசுவதற்காகக் கூட்டப்பட்ட தொரு கூட்டத்தில், வ. உ. சிதம்பரனார் பேசிய பேச்சையே அவ ருடைய முதற் பேச்சாக (இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில்) க் கொள்ளவேண்டி யிருக்கிறது.[1]

தொடக்க காலத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளை 'வ. உ. சி. பேசினார்', 'இன்ன தலைப்பில் பேசினார்' என்ற அளவிலேயே வெளியிட்டு வந்த இதழ்கள், பின்னாட்களில் — அரசியலில் அவர் புகழ் ஓங்கியிருந்த நாட்களில், 'இன்னவாறு பேசினார்' என்று அவர் பேசிய பேச்சையும் வெளியிடலாயின.[2] தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையிலும், வாலிபர் சங்கம் முதலிய பிற அவைகளிலும் வ. உ. சி. ஆற்றிய உரைகள் பல.[3] ஜூன் 1904 முதல் ஆகஸ்ட்டு 1905 முடியத் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் மட்டும் அவர் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் எண் ணிக்கை எட்டு.[4]

இக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட வ. உ. சி.யின் சொற்பொழிவுகள் எதுவும்; இலக்கியச் சொற்பொழிவுகள் உட்பட நூல் வடிவம் பெறவில்லை என்பது குறிக்கத்தக்கது. கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் அவையெல்லாம் முறையாகத் தொகுத்து வெளியிடப்படுமேயானால், பேச்சுக்குச் சிதம்பரம் பிள்ளை[5] என்று எல்லோராலும் போற்றப்பட்ட வ. உ. சி.யின் சொற்பொழிவுகளின் அரிய பல உண்மைகளை அறியும் வாய்ப்பு அமையும்.

கட்டுரையாளர்:

வ. உ. சி யின் முதற் கட்டுரை வெளிவந்த ஆண்டு (இதுவரை கிடைத்துள்ள செய்திகளின் அடிப்படையில்) 1900 என்னலாம்; கட்டுரையின் தலைப்பு, 'கடவுளும் பக்தியும்' இதை எழுதிய போது அவர் வயது இருபத்தெட்டு. தத்துவம், சமயம், அரசியல் சார்ந்த கட்டுரைகளே பெரிதும் எழுதியுள்ளார். குறிக்கத்தக்க சில தலைப்புகள்: 'விதி அல்லது ஊழ்', 'ஈகை', 'சுதேசாபிமானம்'. இருபத்தெட்டு வயதிலேயே அவர் மனம் கடவுள் ஞானத்திலும், தத்துவத்திலும் தோய்ந்திருந்தமை குறிக்கத்தக்கது.

கவிஞர்:

முன்முனை மீது முத்துசாமி
நன்மனங் கொண்டு நவின்ற வெண்பா
உணர்ந்தவை போல உரைக்க முயன்று
கொணர்ந்தேன் சிலகவி கூறிய வழிகளில்
அன்பன் கந்தசுவாமி ஐயனும்
முன்பு சொன்ன முத்து சுவாமியும்
திருத்திய வற்றைச் செப்பிடச் சந்தம்
பொருத்தமாகப் புகன்று சிலபின்
''பாநு''வில் விரும்பிப் பகர்ந்து விடுத்தேன்[6]

இப்படித் தொடங்கியதுதான் வ. உ. சி.யின் கவிதை வாழ்க்கை. தாம் இயற்றிய பாடல்களை யெல்லாம் தொகுத்து, பாடல் திரட்டு' ஒரு தொகுதியாக வ. உ. சி.யே தம் வாழுங் காலத்தில் (1915) வெளியிட்டுள்ளார். இத்தொகுதி இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் பாகத்தில் சிறைக்குச் செல்வதற்கு முன் பாடிய பாடல்களும், இரண்டாம் பாகத்தில் சிறையில் வசித்த காலத்தில் பாடிய பாடல்களும் தரப்பட்டுள்ளன.

இத்தொகுதியில், சிறை செல்வதற்கு முன் பாடிய பாடல்களடங்கிய முதல் பகுதி இந்தக் காலகட்டத்துக்கு உரியது. தொண்ணூற்று ஏழு பாடல்களைக் கொண்டுள்ள இப்பகுதியில் வ. உ. சி. தம் முதல் மனைவி பற்றிப் பாடியுள்ள கவிதைகள் (20) குறிக்கத்தக்கன.

என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்—தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு.
ஓரிரவில் யானுமவ் வொண்டொடியை நீத்தாலவ்
ஓரிரவுங் கண்ணே யுறங்காது—காரிரவை
நிந்தனையே செய்து நெறிகடந்த என்றவனுக்கும்
வந்தனையே செய்வாள் மகிழ்ந்து.

இவை, கவிஞர் வ. உ. சி.யை இனம் காட்ட வல்லன.

இதழாசிரியர்:

இக்காலத்தில் வ. உ. சி. 'விவேகபாநு' என்ற பெயரில் இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார் எனப் பலர் குறித் துள்ளனர்[7] வ. உ. சி யும் தம்முடைய சுயசரிதையில்,

''விவேக பாநு''வை வெளிவரச் செய்தேன்''[8]

என்று குறித்துள்ளார்.

ஆனால், விவேக பாநு என்ற இதழில், வ. உ. சி. அதன் உரிமையாளராகவோ, ஆசிரியராகவோ இருந்தமைக்கான சான்று எதையும் காண முடியவில்லை. மாறாக, வேறு செய்திகளே உள.

1900 செப்டம்பரில தூத்துக்குடி வள்ளிநாயகம் சுவாமிகளால், தொடங்கப்பெற்று, ஒரு வருடம் நடத்தப் பட்டதாகவும்,

இரண்டாவது தொகுதியிலிருந்து எம். ஆர். கந்த சாமிக் கவிராயர் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்றதாகவும்,

அவர் தம்முடன் எஃசு. சாமிநாதய்யரையும் ஆசிரிய ராகச் சேர்த்துக்கொண்டதாகவும் அறிய முடிகிறது.

உரிமையாளர்: கந்தசாமிக் கவிராயர் என்றும், ஆசிரியர் : கந்தசாமிக் கவிராயர் — எஃசு. சாமிநாதய்யர் என்றும் காணப்படுகிறது.[9]

எனவே, வ. உ. சி. குறிக்கும் 'விவேக பாநுவை' வெளி வரச் செய்தேன்' என்பது, பின்னணியில் இருந்து பண, ஆள் பலத்தால் அவருடைய நண்பர்களான வள்ளிநாயகம் சுவாமிகளும் அவருக்குப் பின்னால் கந்தசாமிக் கவிராயரும் நடத்திய இதழ் முறையாகத் தொடர்ந்து வெளிவருவதற்குத் துணை நின்றார் எனக் கொள்வதுதான் பொருந்தும் எனத் தோன்றுகிறது.

வ. உ. சி. ஆசிரியராக இருந்து நடத்தியமைக்குரிய தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், வ. உ. சி. யை இதழாசிரியர் என்ற கண்ணோட்டத்தில் அணுகுவதைத் தவிர்க்கலாம்.

முடிவுரை:

ஏறக்குறைய, தம்முடைய இருபத்தாறாவது வயதில் (1898) முதல் சொற்பொழிவையும், இருபத்தெட்டாவது வயதில் (1900) முதல் கட்டுரையையும், இருபத்தொன்பதாவது வயதில் (1901) முதல் கவிதையையும் எழுதி, தம்முடைய இலக்கியப் பணிகளைத் தொடங்கும் வ. உ. சி. 1898க்கும் 1907க்கும் இடைப்பட்ட காலத்தில் எண்ணற்ற சொற்பொழிவுகளும், நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களும், பல கட்டுரைகளும் எழுதி, தம் பிற்கால இலக்கிய வாழ்வுக்கு அடிப்படை அமைத்துக் கொள்கிறார்.

சிறையில் வாழ்ந்த காலம் (1908-1912):

1908 மார்ச்சில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படும் வ. உ. சி. 1912 திசம்பரில் விடுதலை அடைகிறார். ஏறக்குறைய நாலரை ஆண்டுகள் சிறை வாழ்க்கை அமைகிறது.

சிறை வாழ்க்கையிலும் அவருடைய இலக்கியப் பணி தொடர்கிறது. நூல்கள் பல எழுதப்படுகின்றன. அவற்றில் அச்சு வடிவம் பெற்றவை சில; பெறாதவை பல.

மொழிபெயர்ப்பு:

மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், எனும் இவை சிறையில் மலர்ந்த மொழிபெயர்ப்பு நூல்கள். இவற்றுள் முன்னவை இரண்டும் கோவைச் சிறையில் பிறந்தவை. வலிமைக்கு மார்க்கம் எந்தச் சிறையில் எழுதப்பட்டதென அறிய இயலவில்லை. இம்மூன்றும் வ. உ. சியின் சமகாலத்து ஆங்கில அறிஞரான சேம்சு ஆலனின் (1864-1912) நூல்களின் தமிழாக்கம்.

இவற்றில் மனம்போல வாழ்வு சிறையிலிருந்தபோது எழுதப்பட்டு, அப்போதே (1—10—1908) வெளிவந்து விட்டது. அச்சு

உருவில் வந்த வ. உ. சி.யின் முதல் நூல் இதுவேயாகும். பிற, சிறையில் எழுதப்பட்டன என்றாலும், விடுதலைக்குப் பின்பே அச்சு வடிவம் பெற்றன.

அகமே புறம் என்னும் நூலுக்கு, மகாகவி பாரதியார் அளித்துள்ள மதிப்புரை இங்குக் குறிக்கத்தக்கது.[10]

படைப்பிலக்கியம்:

அறம், மெய்யுணர்வு, சமயம் பற்றிய உண்மைகள் வ. உ. சி. யின் உள்ளத்தோடும் உயிரோடும் இரண்டறக்கலந்தவை. அவற்றை ஒட்டியே தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர் அவர். அதனால் தான் சிறையிலிருந்தபோது, ஏனைய குற்றவாளிகளின் அவல நிலைக்குத் தாழ்ந்து விடாமல், அவர்களையும், உயர்த்தும் பணியில் அவரால் ஈடுபட முடிந்தது.

கண்ணனூர்ச் சிறையில் வாழ்ந்த காலத்தில் பிற கைதிகளின் வேண்டுகோளுக்கிணங்க, பாடப்பட்டதே மெய்யறிவு என்னும் அற நூல். நூறு வெண்பாக்களால் ஆன இந்நூலில், 'தன்னையறிதல்' என்னும் பகுதி சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். அறத்தின்பால் நெஞ்சம் நெகிழும் ஓர் ஆண்மகனை ஆசிரியன் ஒருவன் உருவாக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. கவிதை நலமும் கருத்துவளமும் இதன் சிறப்பியல்புகள்.

கண்ணனூர்ச் சிறைவாச காலத்தில் எழுதப்பட்ட இன்னொரு நூல் மெய்யறம். மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயலும், நூற்றுஇருபத்தைந்து அதிகாரமுமாக அமைந்தது இந்நூல். இந்நூலைப் பற்றி, பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் கூறியுள்ளது இங்குச் சுட்டத்தக்கது.[11]

வ. உ. சி. யின் சுயசரிதையின் முதற் பகுதியும்' பாடல் திரட்டின் இரண்டாம் பகுதியும், இந்தக் காலக்கட்டத்தில் உருவானவையே. சுயசரிதையின் முதற்பகுதி வ. உ. சி. யொடு நெருங்கிப் பழகியவரும் தேசபக்தருமான பரலி சு. நெல்லையப்பரின் வேண்டுகோளுக் கிணங்கக், கோவைச்சிறையில் இருந்தபோது எழுதப்பட்டு நெல்லையப்பரின் 'லோகோபகாரி'யில் வெளி வந்தது. இலக்கிய அழகும் இலட்சிய ஆழமும் நிறைந்த சுயசரிதையில், நகைச்சுவையும் நையாண்டியும் ஆங்காங்கு நடம் புரிகின்றன பாடல் திரட்டில் இரண்டாம் பகுதி (கோவை, கண்ண

னூர்ச் சிறைகளில் பாடியவை)யில் உள்ள பாடல்களுள் வ. உ. சி. யின் 'புலம்பல் பாக்கள்' நினைவில் நிற்கத்தக்கன.

கூட்டினை விட்ட குரீஇக் குஞ்சே நீ
வீட்டினை விட்ட மிகையால் இக்—காட்டினில்
துன்பமுறு கின்றேன்போல் துன்பமுறு கின்றனையோ
இன்பமுறும் சுற்றம் இழந்து,

தனிமைத் துன்பத்தில் வீழ்ந்து, நொந்த வ. உ. சி. யின் துயரம் நிறைந்த இக் கவிதை கண்களைப் பனிக்கச் செய்யவல்லது.

அச்சு வடிவம் பெறாத நூல்கள்:

வ உ. சி தம் சிறை வாழ்க்கையில் மேலும் பல நூல்களை எழுதியுள்ளார். தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலுமாகச் சில மொழிபெயர்ப்புகளையும், பொது நூல்கள் சிலவற்றையும், ஆங்கில நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார், என்ன காரணத்தாலோ அவை அச்சேறவில்லை. அந்நூல்களின் பட்டியல் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது.[12]

முடிவுரை:

கை நோவக். கால் நோவக் கல்லுடைத்துச் செக்
கிழுத்து மெய் சோர்ந்து

சணல் கிழி இயந்திரம் சுற்றி, கைத்தோல் உரிந்து
இரத்தம் கசிந்து,

வாடிய நிலையிலும், ஊக்கம் விடாது நின்று தமிழ்ப்பணி செய்த செம்மல் வ. உ. சி. யை நினையும்போது, உடல் சிலிர்க்கும்; உயிர் நிமிர்ந்தே உணர்ச்சி பொங்கும்; உள்ளமெல்லாம் நெக்கு நெக்குஉருகுமன்றோ?

விடுதலைக்குப் பின் (1913—1936):

விடுதலைக்குப் பின் அமைந்த வாழ்க்கையின் பெரும் பகுதியில் பதிப்புப் பணியிலும், உரை எழுதும் பணியிலுமே வ. உ. சி. தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். எஞ்சிய காலத்தைத் தாம் சிறையில் எழுதிய நூல்களை வெளியிடுவதிலும், சுயசரிதையின் இரண்டாம் பகுதியை முடிப்பதிலும் இடையிடையே சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும், கட்டுரைகளும் கவிதைகளும் எழுதுவதிலும் பயன் படுத்தினார்.

பதிப்பாசிரியர்.

திருக்குறள் மணக்குடவர் உரையை — அறத்துப் பாலிற்கு மட்டுமான உரையை முதன்முதல் பதிப்பித்த பெருமை வ. உ. சி. யையே சாரும், இப்பதிப்பு ஏப்பிரல் 1917இல் வெளிவந்துள்ளது.

பதிப்புத் துறையில் வ உ சி யின் முதல்நூல் இது. அவருடைய திருக்குறள் பதிப்பு முயற்சிகளைப் பற்றிய விரிவான செய்திகளை நூலின் பதிப்புரையில் காணமுடிகிறது. ''பொருட்பாலும் காமத்துப் பாலும்விரைவில் அச்சாகி வெளிவரும்'' என்ற குறிப்பும் பதிப்புரை யில் உள்ளது. ஆனால், அவை வெளிவந்ததாக அறிய முடிய வில்லை.

தொல்காப்பியம் — இளம்பூரணம் — எழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் பதிப்பித்தார். வ. உ. சி சொல்லதிகாரத் தையும் பதிப்பிக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். ஆனால் அஃது இயலவில்லை. பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டையும் முதலில் வெளியிட்டார். இப் பதிப்பு 1928இல் வெளிவந்தது. பின், களவியல், கற்பியல், பொரு ளியல் ஆகிய மூன்று இயல்களையும் 1933 இல் வெளியிட்டார். இதனை அடுத்து, மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் மரபியல் இவை அடங்கிய பகுதி 1936 இல் வெளிவந்தது. தொல் பொருள் இளம்பூரணப் பதிப்புகள் மூன்று பகுதிகளாக வெளி வந்தன.

எழுத்ததிகாரம் ஒரே பதிப்பாகப் பொருள் அகத்திணையியல் புறத்திணையியல் பதிப்பை அடுத்து, 1928இலேயே வெளிவந்தது. இவ்விரு பதிப்புகளும் வ. உ. சி யின் தனி உழைப்பின் பயன்கள் 1933இலும் 1936இலும் வெளிவந்த தொல்பொருள் இளம்பூரணத் தின் ஏனைய இயல்கள் அமைந்த பதிப்புகள் இரண்டிலும் வ.உ.சி. யொடு பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும் இணைந்து பணி யாற்றியுள்ளார்:

இளம்பூரணத்தின் பெரும்பாகத்தைப் பதவுரையொடு வெளி யிட்ட பெருமை வ. உ. சியையே சாரும். வ. உ. சியின் பதிப்பில் பல புதுமைகளும் சிறப்புகளும் அமைந்துள்ளன என்பர் திரு. க. ப. அறவாணன்.13.

உரையாசிரியர் ;

திருக்குறள், சிவஞான போதம், இன்னிலை இவற்றிற்கு வ. உ. சி. உரையெழுதியுள்ளார். முடிமன் முத்துசாமி என்பவர் எழுதிய வள்ளியம்மை சரித்திரம் என்னும் கவிதை நூலுக்கு அரும் பதவுரை எழுதியுள்ளார்.

இவ்வரிசையில் முதலில் வந்தது இன்னிலைக்கு வ. உ. சி. எழுதிய உரையாகும். இதில் ஒவ்வொரு பாட்டுக்கும் அன்னுவயம், பதவுரை பொழிப்புரை கருத்துரை, விசேடவுரை என்ற பாகு

பாட்டின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளார். 'விசேடவுரை' என்ற பகுதி ஆசிரியரின் பேரறிவையும், நுண்மாண் நுழை புலத்தையும் புலப்படுத்தவல்லது.

திருக்குறள் முழுமைக்கும் வ. உ. சி. உரையெழுதியுள்ளார். ஆனால், அறத்துப்பால் உரை மட்டுமே (1935) வெளிவந்தது. இந்நூல் கட்டுரையாளரின் பார்வைக்குக் கிடைக்கவில்லை.

சிவஞான போதத்திற்கு வ. உ. சி. எழுதிய உரையும் 1935 இலேயே வெளிவந்துள்ளது. இதற்கு வ, உ. சி. எழுதியிருக்கும் உரைப்பாயிரமும் " சிவஞான போத வரலாறு " என்ற பகுதியும் படிக்கத்தக்கன.

இவ்வுரையில், ஒவ்வொரு சூத்திரத்தின் சாரத்தையும் அதன தன் தலைப்பாகவும், சூத்திரத்தின் பொருளைப் " பொருள் " என்றும் இலக்கணக்குறிப்பு முதலியவற்றை "அகலம்" என்றும், கருத்துரையைக் "கருத்து" என்றும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

வள்ளியம்மை சரித்திரம் என்னும் நூலுக்கு அரும்பதவுரை மட்டும் எழுதியுள்ளார். வ. உ. சி. இந்நூலை எழுதியவர் முடிமன் முத்துசாமி என்பவர். ஆனால் இந்நூல் எழுதியவர் வ. உ. சியே என்பர் பலர். அவருள் குறிக்கத் தக்கவர் வணக்கத்திற்கு உரிய டாக்டர், ம. பொ. சி. அவர்கள்[14] இந்நூலைத் தாமே இயற்றியதாக வ. உ. சி. தம் சுய சரிதையில் கூறுகிறார் என்பர் ம. பொ. சி. அவர்கள். ஆனல், சுயசரிதையில்,

> மகராசி என்னும் வள்ளியம்மையை
> ... ...
> ... ...
> ... ... யான் மணந்ததும்
> அளகையூர் அடைந்ததும் அதன் பின் நிகழ்ந்ததும்
> முடிமன் மைத்துனன் முத்துசாமி
> விளம்பிய சரிதையுள் விரிவாக் காணலாம்.[15]

என்றுதான் வ. உ. சி, குறிப்பிடுகின்றார். அதனால், வ. உ. சியின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டு, வள்ளியம்மை சரித்திரம் அவர் எழுதியது இல்லை என்று முடிபு கூறலாம்.

பிற இலக்கியப் பணிகள் :

1. சாந்திக்கு மார்க்கம், பேரின்ப மார்க்கம் என்னும் இரு ஜேம்ஸ் ஆலனின் நூல்களை மொழிபெயர்த்துள்ளார். முதலாவது மட்டுமே அச்சில் வந்துள்ளது.

2. தம் சுயசரிதையின் இரண்டாம் பகுதியை இக்காலக் கட்டத்திலேயே எழுதி முடித்தார். தனிப்பாடல்கள் சிலவும் பாடப் பட்டுள்ளன.

3. கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சிறைசெல்லும்முன்பு எழுதப்பட்ட, கட்டுரைகளைப் போலவே இவையும் தொகுக்கப் படவில்லை. மொழி இலக்கியம் பற்றி அமைந்த கட்டுரைகள் பல.

4, செய்த சொற்பொழிவுகள் பல. அவை அரசியல், சமுதாயம், சமயம், இலக்கியம் சார்ந்தவை. அவற்றில் 1927 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் கூடிய மூன்றாவது அரசியல் மாநாட்டுத் தலைமையுரை மட்டும், 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

பன்மொழிப்புலவர் வ. உ. சி.

வ. உ. சி. பன்மொழிப் புலவராக விளங்கினார். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் ஆழ்ந்த புலமை உடையவராய்த் திகழ்ந்தார் என்பதற்கு அவருடைய இலக்கியப் படைப்புகளும் மொழி பெயர்ப்புகளும் சான்று. தெலுங்கு மொழியிலும் அவர் தேர்ந்திருந்தார். தாம் எழுதிய மனம்போல வாழ்வு என்ற நூலைத் தாமே தெலுங்கில் 'மதிவலனே கதி' என்ற பெயரில் மொழி பெயர்த்திருக்கின்றார். இவருக்கு வடமொழியும், மலையாளமும் தெரியும் என்றும், மலையாள நூல் ஒன்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.[16]

முடிவுரை :

வ. உ. சி. தமிழ்க்கு ஆற்றிய தொண்டு போற்றுதலுக்கு உரியதாகும். வ. உ. சியின் இலக்கியப்பணிகளை நினைக்கும் போதெல்லாம் அவை உருவான காலச் சூழலையும் நினைவு கூர்வது அவசியமாகும். அப்போதுதான் அவற்றின் பெருமையை முழுமையாக உணர முடியும்.

செல்வமும், செல்வாக்குமாக இருந்த காலத்திலும் (1898-1907) வெஞ்சிறையில் வேதனையில் வாடிய காலத்திலும் (1908-1912). எல்லாம் இழந்து பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடிய காலத்திலும் (1913-1936) அவர் தமிழை மறக்கவில்லை. இலக்கியத் தொண்டைத் தம்வாழ்வின் ஓர் அங்கமாகவே கருதிச் செயல்பட்டு வந்தார்.

அடிக்குறிப்புகள்.

1. சுதேசமித்திரன், சென்னை 15—8—1898.

2. **M. N. N. R. (Madras Native News Papers Report)**

3, சைவசித் தாந்த சபையினுட் புகுந்து
கைவரக் கொண்டேன் கருத்தினி துரைத்தலை:
... ...
... ...
வாலிபர் சங்கம், மாண்பிரம சங்கம்
நாலைந்து மற்றவை நயத்தொடு சேர்ந்தேன்,
பிரசங்கங் கேட்டேன்; பேசினேன் யானும்;
பிரசங்கி என்றொரு பெயரும் கொண்டேன்,
— வ. உ. சி. சுயசரிதை, பாரி நிலையம், 1979 (ஆறாம் பதிப்பு) பக்கம். 41.

4. தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் இருபத்திரண்டாம் வருட அறிக்கைப் பத்திரமும், நிபந்தனைகளும், 1905, பக்–9.

5. வீரவிளக்கு வ. வே. சு. ஐயர், சுத்தானந்த பாரதியார், வசந்தா புத்தகசாலை, கண்டனூர் 1947 (முதற்பதிப்பு), பக்-5

6. சுயசரிதை, வ. உ. சி பாரிநிலையம், 1979 (ஆறாம் பதிப்பு) பக்–41.

7. (1) வ. உ. சி. வாழ்க்கைக் குறிப்பு, மு. சண்முகம் பிள்ளை, தமிழாய்வு (தொகுதி–2), சென்னைப் பல்கலைக்கழகம், 1973 பக்.184.

(2) வ. உ. சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, பேராசிரியர், நா. வானமாமலை, மக்கள் வெளியீடு, 1980 (முதற் பதிப்பு) பக்–22.

(3) சிதம்பரனாரின் செந்தமிழ்ப் பணிகள், எழில் முதல்வன் செந்தமிழ்ச்செல்வி (திங்களிதழ்) 1972 (செப்டம்பர்) பக். 14.

(4) வ. உ. சிதம்பரம் பிள்ளை, வ. உ. சி. சுப்பிரமணியம், கலைக்களஞ்சியம் 1956 (முதற்பதிப்பு) பக். 663.

8. சுயசரிதை, வ. உ. சி. பாரிநிலையம், 1979 (ஆறாம் பதிப்பு) பக். 40.

9. விவேக பாநு (திங்களிதழ்), தொகுதி–1, பக் 1-3, தொகுதி-2 ப, க. 1.

10. அகமே புறம் என்ற பெயருடன் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் புதிய நூல் ஆலன் என்ற பண்டிதரின் ஆங்கில நூல் ஒன்றிலிருந்து மொழிபெயர்த்தது. எனினும், பிள்ளையவர்கள் இதிலே பரிபூரணமான தமிழ் மணத்தை யேற்றியிருக்கின்றார்கள். பிற நாட்டுப் பொன்னிலே நமது முத்திரையை வைத்து நம் பொருளாக்கி விட்டார்கள். இது மொழிபெயர்ப்பென்று பிள்ளையவர்கள் சொல்லாவிடில் நாம் இதனைத் திருக்குறளின் சில பகுதிகளுக்கு விரிவுரையென்று கொண்டிருப்போம். நோய், கீழ்மை, மிடிமை. முதலிய தளைகளை இப்பிறப்பில் இன்றே, இப்பொழுதே தொலைத்து நலமெய்த வேண்டுவோர் இந்நூலின் உபதேசங்களைக் கைக்கொள்க உடலுறுதி அறிவு, ஆக்கம், தெளிவு, வீடு ஆகிய இன்ப நிலைகளைப் பெற விரும்புவோருக்கு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் நல்ல துணையாக அமைந்துள்ளார்கள். இதுநன்று. மெய்யறம், வ. உ. சிதம்பரம் பிள்ளை, புரொகிரஸிவ் பிரஸ் சென்னை. 1914 (முதற்பதிப்பு) பக்-7-8,

11. தமிழ்ப்புலவரேயன்றி இங்கிலிஷ் படித்த புலவரிற் பலரும் இந்நூலின் திறத்தை மெச்சுவர் என்பது துணிபு. ஒரு முறை கண்ணுறுவோர்க்கு இந்நூலின் அருமைதானே புலப்படுமாதலால் அதனை இங்கு விரிப்பது மிகையாம். இந்நூல் நின்று நிலவுக என்பது என் வேண்டுகோள்''. — தமிழ் இலக்கிய இலக்கணத்துறைகளுக்கு வ. உ. சியின் தொண்டு. டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், தமிழாய்வு (தொகுதி–2) சென்னைப் பல்கலைக் கழகம், 1973 (பக். 178–179).

12. 1. திருக்குறள் அறத்துப்பாலின் ஆங்கில மொழி பெயர்ப்பு.
2. ஊழை வெல்ல உபாயம்.
3. முத்தி நெறி.
4. அழகும் ஆரோக்கியமும்.
5. ஆயுளை நீட்டிக்கும் நெறி,
6. சிவமதம்.
7. விஷ்ணுமதம்.
8. புத்தமதம்,
9. இஸ்லாம் மதம்,

10. கிறிஸ்து மதம்.
11. மனித மதம்.
12. The Universal Scripture (ஆங்கில நூல்)
13. வ. உ. சியின் இலக்கணப்பதிப்புப்பணி. செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்) 1972 (செப்டம்பர்) பக். 15-26.
14. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ம. பொ. சிவஞானம், இன்பநிலையம், 1970, (முதற்பதிப்பு) பக். 102.
15. சுயசரிதை வ. உ. சி., பாரி நிலையம், 1979, (ஆறாம் பதிப்பு) பக் 31.
16. வ உ சியின் பன்மொழிப் புலமை, எம். எசு. மணி (தொகுப்பாளர்) குயில் (வ. உ. சி. சிறப்பிதழ்), திங்களிதழ், 1978 (நவம்பர்–டிசம்பர்), பக் 23.

இணைப்பு ஒன்று:

வ. உ. சி இயற்றிய நூல்கள்
(அச்சு வடிவம் பெற்றவை)

	நூலின் பெயர்	வெளிவந்த ஆண்டு
1	மனம்போல வாழ்வு	அக்டோபர், 1908
2	அகமே புறம்	ஏப்பிரல், 1914
3	மெய்யறம்	சூன், 1914
4	பாடல் திரட்டு	சனவரி, 1915
5	மெய்யறிவு	ஆகஃச்டு, 1915
6	வலிமைக்கு மார்க்கம்	சூன், 1916
7	திருக்குறள் மணக்குடவர் உரை (அறத்துப் பால்)	ஏப்பிரல், 1917
8	இன்னிலை உரை (வ. உ. சி. எழுதியது)	சூலை, 1917
9	எனது அரசியல் பெருஞ்சொல்	1927
10	தொல். பொருள். இளம்பூரணம் (அகத்திணையியல். புறத்திணையியல்)	1928
11	தொல். எழுத்து. இளம்பூரணம்	1928

12	தொல். பொருள். இளம்பூரணம் (களவியல், கற்பியல், பொருளியல்)		1933
13	சாந்திக்கு மார்க்கம்	சூலை,	1934
14	திருக்குறள் விருத்தியுரை (வ. உ. சி. எழுதியது)		1935
15	சிவஞானபோத உரை (வ. உ. சி. எழுதியது)		1935
16	தொல். பொருள். இளம்பூரணம் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல)		1936
‡17	வ. உ. சி. சுயசரிதை	நவம்பர்,	1946
‡18	வ உ. சி. கண்ட பாரதி	நவம்பர்,	1946

‡இக்குறியிட்ட நூல்கள் இரண்டும் வ. உ. சி. யின் மறைவுக்குப் பின் அவருடைய மகனார் திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப்பட்டவை.

இணைப்பு இரண்டு:

வ. உ. சி. யின் நூல்கள் துறைவாரியாக

1 உரைநடை நூல்கள்:

1. மனம் போல வாழ்வு |
2. அகமே புறம் |
3. வலிமைக்கு மார்க்கம் | (மொழி பெயர்ப்பு)
4. சாந்திக்கு மார்க்கம் |
5. எனது அரசியல் பெருஞ்சொல் (சொற்பொழிவு)
6. வ. உ. சி. கண்ட பாரதி (வாழ்க்கை வரலாறு)

2 செய்யுள் நூல்கள்:

1. மெய்யறம்
2 மெய்யறிவு
3 பாடல் திரட்டு
4 சுய சரிதை

3 பதிப்பித்த நூல்கள்:

1 திருக்குறள் — அறத்துப் பால் — மணக்குடவர்
2 தொல். பொருள். இளம்பூரணம்
3 தொல். எழுத்து. இளம்பூரணம்

4 உரையெழுதிய நூல்கள்:

1 இன்னிலை

2 திருக்குறள்
3 சிவஞான போதம்

இணைப்பு மூன்று:

வ. உ. சி. எழுதி

—: அச்சில் வராத நூல்கள் :—

1 திருக்குறள் அறத்துப்பாலின் ஆங்கில மொழி பெயர்ப்பு[1]
2 ஊழை வெல்ல உபாயம்
3 முத்தி நெறி
4 அழகும் ஆரோக்கியமும்
5 ஆயுளை நீட்டிக்கும் நெறி
6 சிவ மதம்
7 விஷ்ணு மதம்
8 புத்த மதம்
9 இஸ்லாம் மதம்
10 கிறிஸ்து மதம்
11 மனித மதம்
12 The Universal Scripture (ஆங்கில நூல்)[2]
13 பேரின்ப மார்க்கம்[3]
14 திருக்குறள் — மணக்குடவர் உரை — பொருட்பால்
15 திருக்குறள் — மணக்குடவர் உரை — காமத்துப் பால்[4]

அடிக்குறிப்புகள்:

1 முன்னுரை, மனம்போல வாழ்வு,
1—10—1908 (முதற் பதிப்பு)
2 நன்றி கூறல், மெய்யறம்,
ஜூன், 1914 (முதற் பதிப்பு)
3 முன்னுரை, சாந்திக்கு மார்க்கம்,
ஜூலை, 1934 (முதற் பதிப்பு)
4 திருவள்ளுவர், திருக்குறள், மணக்குடவர் உரை,
அறத்துப் பால், 1917 (முதற் பதிப்பு)

———:[((o))]:———

பாரதி பரம ஞானி!

K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

பாரதி ஒரு பரமஞான சித்தர்; பரிபூரணனைப் புலன்கள் வழி அனுபவிக்கும் மெய்யடியார். துதிபெறும் மகாயோகியாய தாயுமானுரது பக்தி உருக்கத்திலே உருவான ஞானி. இவர் உலகுய்ய நான்யார்? உள்ளம் யார்? என்பதைப் புலனுக்கிச் சுவைக்க வைத்து, உள்ளம் உலகு இவைகளைப் பற்றிய தொடர் பினையும் ஆய்ந்து சிந்திக்குமாறு தூண்டிய சித்தர்; தெய்வபக்தி யுடன் ஒவ்வொரு உயிரும் மண்ணில் நல்லவண்ணமாய் விளக்க முறச் செயல்படும் வாழ்வுண்மையின் வகைகளை உணர்வுடன் தெளியவைத்தவர்.

பாரதியாருக்கு உண்மையே அழகுடைய அறிவுத்தெய்வம்; பயன்தரும் தூய செய்கையே வெல்லும் அறம்; நற்றவத்தொழி லினை அறவழியில் புரிந்து மயக்கம் தெளிந்து ஈட்டுவதே பொருள். எங்கும் பரந்து பல்வகையாய் நிலவும் அகவெளி, புற வெளியிலும், அவற்றின் வேருய் உள்ள அறிவு வெளியிலும் அருள் வெளியிலும் படரும் வாஞெளியினை மண்ணில் காண்பது இன்பம். வாஞெளி யின்பத்தைக்கண்டு கவிதைபாடி மகிழ்வது அவரது தொழில். உயிரனைத்தும் ஒன்று என்ற உண்மையினைப் புகட்டி, நோக்கும் திசைதொறும் நாமன்றி வேறில்லை யென்ற உணர்வு உண்டாகும் படி, தம் பாக்கள் மூலம் காட்டும் திறமுடைய இவர், அன்பின்வழி இயங்கும் உயிரின் ஒருமைத் தத்துவத்தை, மலரவைத்து, மக்க ளுயிர்கள் ஒழுகவேண்டிய அறங்கள் வழிபெறவேண்டிய ஆன்மீக நலன்கள் யாவையென அறியவைத்து உயிர்வளர்ச்சிக்கு மறு மலர்ச்சி தோன்றுமாறு ஒரு புதிய திருப்பத்தை வாழ்வில் தொடக்க முற உண்டாக்கியவர். அறிதொறும் அறியாமை அகல, உள்ளத் தில் அறிவொளி எங்கணும் பரவ ஏற்றித் தெய்வச் சிந்தனைகளை உணர்ந்து செயலாக்கும் ஞானசித்தின் மூலம், வழிவகைகளை வகுத்தவர்.

இத்தகைய ஞானசித்தியின் எழுச்சி, உயிர்த் தன்மையின் தத்துவ விளக்கமாய்த் திகழ்ந்து. தேசிய உணர்வினை எழுப்பும் சுதந்தர சக்தியாய் ஒளியொடு வீறிட்டு, பாரதியாருக்கு இலங்கியது. அதனுல் பாரதிக்கு ஆனந்தம் நல்கும் ஞானக்காட்சித் தெளிவு, தன் ஆன்மசக்தியின் விழிப்பின் மூலம் புலனுயிற்று. இவரது கவி யுள்ளம் தத்துவவல்லமை கொண்டு எளிதாய்த்தேசிய ஞானஒளியில்

படிந்துள்ளது. இதனால் தியாகசீலம் பாரதியார்பால் ஓங்கிடவே, யோகத்தைப் பற்றியும் யாகத்தைப்பற்றியும் பின் வருமாறு,

'ஊருக்கு உழைத்திடல் யோகம்—உயிர்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்'

என மொழிந்து தேசியத்தில் பக்தியினை விளைவித்து, பாரதியார் ஞானவிளக்கம் எய்தினர். மற்றும்

'ஒக்கத்திருந்தி உலகோர் நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி'

எனத் தேசியத்தில் ஞான வரம்பினை நிலை நாட்டி வீர சுதந்திரத்தின் ஆண்மைத் தன்மையினையும் பொலிவினையும் தெளிவாக்கி விளக்குகின்றார். ஞானியின் இலக்கணத்தைப் பற்றிப் பாரதியார் கூறுவது ஈண்டுக் கருதற்குரியது, அஃது

நானெனு மாணவம் தள்ளலும்—இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்—பர
மோனநிலையினிடத்திலும்—ஒரு
மூவகைக் காலங்கடத்தலும்—நடு
வானக்கருமங்கள் செய்தலும்—உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும்'

சீரிதாம்.

ஞானவுணர்வு வாழ்வுடன் கலந்து ஒன்றியிருந்தால் எங்கும் நிறைந்த பொருள் அருளாம் என்ற உணர்வே நின்று நிலவும் என்பது பாரதியாரின் உள்ளம், வாழ்வின் மேம்பாட்டையும் மக்களது பண்பாட்டையும், பாழாக்கும் சாதி சமய ஏற்றத்தாழ்வுகள் யாவும் ஞானத்திற்கு முன்குலைந்திடுமெனப், பரமஞானி பாரதியார் புலனக்குகிறார். மற்றும் அவர்,

'அங்கும் இங்கும் எங்கும் உளவாகும்
அவனன்றியோர் பொருளுமில்லை
அன்றி ஒன்றும் இல்லை இந்த
அறிவுதான் பரம ஞானமாகும்'

எனத் தாயுமானர் தத்துவக் கருத்தையும் தேர்ந்திடல் வேண்டும் என அறிவு புகட்டுகின்றார். ஞானத்தின் முக்கியத்துவத்தைக் குறிக்க வேண்டி

'ஞானம் வந்தால் பின் நமக்கேது வேண்டும்'? எனத் தலை ஞானத் தத்துவர் ஓர் வினவினை எழுப்பி, விடையினையும் தானே பகராது பகர்கின்றார்.

ஞானமுற்றார்பால் நெருங்காத பரமசாதுவாகிய கவியை, மிகத்துணிவோடு வாதாடு முறையில் வேடிக்கையாகவே, சாடுகிறார், பாரதியார், ஏன்? ஞானமில்லாதும் பண்பாடுமில்லாதார் பால் கவிஉறவுபூண்டு வாழ்வில் கவலை இருளை அன்னார்பால் வீறுமிகு ஆற்றலோடும் பரப்புவதால், ஞானி பாரதியார்,

'கலியைப் பிறந்திடக் கைஓங்கினோம்—நெஞ்சிற்
கவலையினால் அனைத்தும் நீங்கினோம்,

என முழக்கமிடுவாராயினர்,

'வேதவானில் விளங்கி அறம்செய்மின்
சாதல் நேரினும் சத்தியம் பேணுமின்
தீது அகற்றுமின் என்று திசையெலாம்
மோதநித்தம் இடித்து முழங்கும்'

ஞானஒளி வண்ணனாகிய கண்ணனது குரலுக்குப் பரஞான மெய்க்கீதையைக் கவிதை வடிவில் அமைத்த பாரதியார், ஞான இன்ப ஒலி கொடுத்தார். தேவ சக்திகளை மக்கள்பால் நிலைபெறச்செய்யத் தலைப்படல் வேண்டுமென்ற சீரிய உணர்வு பெற்று ஞான வள்ளலாகிய கண்ணனைத் தகப்பன், தாய், சேவகன் என்ற முறையில் பழகி, ஞானமென்பதோர் சொல்லின் பொருளை நுட்பமுற விளங்கவைத்தார்.

பின்னர் கண்ணனைப் பாரதியார் ஞானமலையாகப் பாவித்துப் பேரின்பக்காட்சியிலே திளைத்த ஞான்று, ஞானமென்பது பாரத நாடென்ற முடிபுக்கு வந்து, உரிமையுணர்வால் தேசபக்தியை இறையன்பில் தேக்கிப் பதியவைத்தார். சுதந்திர வாழ்வுடைய காக்கைக் குருவிகளை வானவெளியில் கண்டு ஞானஒளி பெற்று,

காக்கைக் குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசை யெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்'

என ஞான சுதந்திர நற்கவிஞராய் உயிர்த்தன்மையின் ஒருமைப் பாட்டினை அருள்வாராயினர். இத்தகைய ஆன்ம ஞானத்தின் முன் சாதிசமயச் சழக்குக்குரிய வேறுபாடுகள் நில்லாது அழியுமென்பதை

'வேதியர் ஆயினும் ஒன்றே — அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே
நன்று இது தேர்ந்திடல் வேண்டும்'

என ஆன்ம ஞானத்தின் பொருளுண்மையினையும் சிறப்பினையும் செப்புவாராயினர். மற்றும்

'எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் — இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் அதில்
மானுடர் வேற்றுமையில்லை'

என ஆன்மீக தத்துவத்தை விளக்கி ஒளியுறுத்துவாராயினர்.

சமுதாய வாழ்வு சுதந்திர சமத்துவ நிலையினை யெய்திட
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
இல்லாரும் இந்நாட்டு மன்னர்
ஆம் ஆம் ஆம்! ஓம் ஓம் ஓம்!

எனப் பாரதியார் ஞானப்பறை கொட்டுவாராயினர். இந்திய சமுதாயம் தெய்வீக சமரசத்தில் விளங்கி வேதாந்தப் பொதுமையில் வாழ வேண்டுமென்ற சீரிய எண்ணங்கொண்டு பாரதியார் தம் பாக்களை, வேதாந்த ஞான மணத்தில் பொருந்துமாறு பாடிப் பொலிய வைத்துள்ளார். வாழும் வாழ்வில் யாவரும் ஞானத்து தெய்வானந்தச் செழுமையினைப் பெறவேண்டுமென்ற துணிவுடன் பாரதியார்,

'எல்லா வுயிர்களிலும் நானே யிருக்கின்றேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரும் அமரநிலை யெய்து நன்முறையை
இந்தியா வுலகிற் களிக்கும்'

எனத் தன் ஆர்வத்தை வையத்தில் தழைக்க வைத்தார்

இத்தகைய மெய்ஞ்ஞான ஒளியிலே தாக்குற்ற ஞானபாரதியார், தெய்வ அருள் பொங்குமாறு, 'ஓம்' எனும் மொழி மூலமாக

அழைக்கும் பொழுதினில்
போக்கு சொல்லாமல்
அரை நொடிக்குள் வரும்'

குழலிசைக்கும் ஞானக் கண்ணனைத், தன் குருக்ஷேத்திர உளத்தில் அனுபவக் கலை ஞானப் பொருளாக ஆனந்த நிறைவில் வீற்றிருப்பதை உணர்கிறார். உணரவே ஒளி மயமாய கண்ணன் கீதமினிய கீதை வாழ்வின் இலக்கணத்துக் கலையினைத் தன் உணர்வாட்சிக் கேற்ற காட்சியாய்ப் புலனாகவே

கேட்கும் ஒலியிலெல்லாம்—நந்தலாலா
நின்கீதம் இசைக்குதடா—நந்தலாலா

எனப் பண்ணிசையாகத் தன்னெடு இழையும்போது, தெய்வப் பேரின்ப வாழ்வு அளிக்கும் கண்ணன்,

'நண்பனுய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனுகவும்'

யாவுமாகி நின்று எவ்வுயிர்க்கும் அருள் புரிந்து, அறிவு இச்சை செயல்களுக்கு நல்லூட்டம் அளித்து மன்னுயிர்களுக்கு அமரத்துவம் வழங்கும் வித்தகனுரை, மெய்யுணர்வாளராகிய பாரதியார் கண் குளிரக் கண்டார்.

'நான்', 'நான்' எனும் அகந்த உணர்வை அகற்றுவது எளி தன்மையான், உலகியற்கைப் பொருள்களில் 'நான்' ஆகக் கண்டு அக்காட்சியினிலே 'நான்' எனும் உறவினில்நின்று, இறைவன் இயக்கத்தை அறிந்து. தானலாது பிறிதில்லே யெனத் தன்னைத் தனிமையில் உணரும் நிலையினைப், பாரதியார் நமக்கெல்லாம் அறி முகப் படுத்தி அதனையே பயிலச் செய்யத் தூண்டிவிடுகிருர். 'நான்' எனும் இதய நெகிழ்ச்சியில் முகிழ்க்கும் தெய்வ விளக்கம் சிவோக மாய்த் (சிவோஹம்) திகழவே

கடவுள் நீயே
தத்வமஸி, தத்வமஸி, நீயே அஃதாம்'

என்பது உள்ளமதில் மலர

'வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்
மண்ணில் திரிகின்ற விலங்கெலாம் நான்
கானிழல் வளரும் மரமெலாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்'

எனச் 'சதா காலம் 'சிவோஹம்' எனச் சாதிக்குமாறு வற்புறுத்து கிருர். இவ்வாறு தன்னை மறந்து தன்னிலே ஏகாந்த நிலையின் இணையிலாத சுதந்திரச் சிறப்பைத்,

'தனிமை கண்டதுண்டு—அதிலே
சாரம் இருக்குதம்மா'

என வியப்புறப் பாரதியார் உணர்த்துவாராயினர். ஆதாரமாக விளங்கும் அந்தச் சாரத்தில் திகழும் பேரறிவின் மூலம் தெய்வச் செவ்வியின் அற்புத விந்தைகளையும், அஃதாவது தன்னில் எதையும் தன்னையே யாவற்றிலும் காணும் தந்திர வித்தைகளையும் யோகத்து எளிய சாதனைகளையும் ஒளியொடு கூடிய ஞானசித்திகளை யும் தவஞானச் செல்வராகிய பாரதியார் செழுமையாகப் புலப் படுத்திவிடுகிருர்.

பாரதியார் உலகியலின் உண்மையினை யுணர்ந்த ஞானம் பெற்றவராதலான், காலம் கடவுளுடையதாதல் பற்றி, அவர்பால் மனம் திளைத்து போற்றுதலில் அளக்களாகாத அறிவும் துளக்க மிலாத உறுதியும் உடையவர்.

'பொன்னூர்ந்த திருவடியைப் போற்றியிங்கு
புகலுவேன் யானறியும் உண்மை யெலாம்;
முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார்
முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்

என்பர். ஆன்மீக சிந்தனை மிக்குடைய சித்தர் போன்று மக்களைத் தெய்வமென்பதோர் சித்தங்கொள்ளுமாறு விரும்புவார். 'மனமே! நீ வாடிநில்லாதே!' எனஞானபாரதி மக்களைத் தட்டிஎழுப்பி

'தெய்வம் இருக்குதடி தங்கமே தங்கம்'

என்றும்,

'தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்'

என்றும், 'அறிவிலிகாள்! — பல

ஆயிரம் வேதம் அறிவு ஒன்றே தெய்வம் உண்டு
ஆம் எனல் கேளீரோ, என்றும்
'தெய்வம் நீ யென்றுணர்' என்றும்
'வலிமையுடையது தெய்வம் — நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்', என்றும்
'தெய்வம் பலபலச் சொல்லிப் — பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்.
உய்வதனைத்திலும் ஒன்றாய் — எங்கும்
ஓர்பொருளானது தெய்வம்'

எனச் சுட்டிக்காட்டி, நான்மறையின் நுட்பப்பொருளின் உண்மை யினை நுகர்ந்தவருக்குத் தான், இறைப்பொருளின் விளக்கம் நுண்ணுதிற் புலனாகு மென்பார்.

பாரதியார் அன்பிற் சிறந்த தவமில்லையென்றும், அன்புக்கு அழிவில்லையெனக் கூறி, கடவுளவர்பால் அன்பின் காரணமாக பக்தி கொண்டால், அப்பக்தி கொண்ட தொண்டர்பால், தாயினுஞ் சாலப் பரிவுடைய மாயக் காவலராக விளங்கி நின்று 'நீ தேடுவது என்னையே' யென எல்லையிலாக் கருணை பொழிந்து, என்றும் பிரியா நிழல் போன்று தோன்றி தொடர்பு கொள்ளும் பெருமைசால் தகைமையுடையவர் என்பார். அத்தொடர்பின் மூலம் இறைவன் அத் தொண்டரை வாழவைக்கும் பொறுப்புணர்வால் கருணைபுரிவா ரென்பது ஞானபாரதியாரது ஒளியுள்ளம். மற்றும் அவரே

'இத்தரை மீதினிலே இந்தநாளினில்
இப்பொழுதே முத்தி சேர்ந்திட'

நாடுவார். இதற்காகவே பாரதியார்,

'ஆன பொருள்கள் அனைத்திலும் ஒன்றாய்
அறிவாய் விளங்கு முதற்சோதிநான்'

என மொழிந்து, யாவரும் தானே பிரம்மம் என்ற கோட்பாட்டைக் கொள்ளும்படி வற்புறுத்துவாராயினர், இதனை ஆதாரமாகக் கொண்டு உணர்ந்துருகும் பக்திநிலைதான் முக்தி நிலை என்பார்.

'முக்தி என்றொரு நிலைசமைத்தாய் — அங்கு
முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்
பக்தி என்றொரு நிலை வகுத்தாய் — எங்கள்
பரமா' என்றும்
'பக்தியுடையார் காரியத்தில்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்துமுளைக்கும் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்'

எனவும் பாரதியார் பகர்வார்,

இறை உயிர்களுக்கெல்லாம் கண்போன்று ஒளிபொருளாக விளங்குவதால், அக்கண்ணன்பால் சரண்புகுங்காலை, அவன் நமக்கு சரணாக நின்று ஆட்கொண்டுப் பணிபுரியும் பான்மைத் தத்துவத்தின் வாய்மையினை,

'கண்ணன் எனது அகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பு'

என பாரதி உணரவைத்தார். மற்றும் தன்னை இறைபால் கொடுத்து தன்னையே மறந்து பயன் கருதாதே பணி புரிந்து நின்றார்க்கு, இறை தன்னையே பிரியமுற ஈந்து வண்ணமுறை ஆதரிக்கும் பண்புடையாரென்பது பாரதியாரின் ஞானத்துணிபு. இத்துணிபால், 'நின்னையே நீபார், நீயே அவன்' என கருத்துக்கொண்டு, பயனை இறைபால் விடுத்துத் தம் கடமையினைப் புரிவோர்க்கு வாழ்வின் துன்பமும் துயரமும் இலாதாகும். மகாசக்தி

பயனெண்ணாமல் உழைக்க சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்

எனக்கூறி அன்றாட வாழ்வில் செம்மை நலனோடுடன் குழையும் ஞானநுண்ணூர் வினைபக்திக் கவிதைச் செல்வத்தில் கூடரும்படி

பாரதிஞானியார் எழிலுற எளிதே விளக்கியுள்ளார். இஃதே உண்மை ஞானபக்தி நெறியின் உயர் தத்துவமாகும்.

உண்மை அறிவு வாய்ந்து சக்தியை நினைத்து பக்தி செய்து முத்திபெற வேண்டுமென்பது பாரதியாரின் கருத்தாகும்.

'பக்தியினாற் பாடிப் பலகாலும் — முக்திநிலை
காண்போம்.'

என்பது பாரதி உரைக்கும் உண்மை. தன்மனத்திலே சக்தி உறைந்து நின்ற நிலையினைப் பற்றிக் கூறுங்கால் சக்தியை மலராகவும் தன்னை வண்டினைப் போலவும் கருதும் பாங்கு எத்துணை மாட்சித்து!

'காதல் வனத்தினிலே தன்னையொரு மலரைப்போலும்
வண்டினைப் போல எனையும் உருமாற்றி விட்டாள்'

என ஆன்மீகத்திற் காட்டப்பட்ட அருள்ஞானக் கவிஞர் இயம்புவாராயினர். மற்றும் 'பாட்டினிலேச் சொல்வது அவன் சொல்லாகும்' என அன்னை பராசக்தி கவிதைச் செல்வத்தைத் தனக்கு படைத்து அளித்து கற்பனையின்றிக் கலந்து நின்றதைக் குறிப்பிப் பாராயினர் பராசக்தி அருளும் இன்பக்கட்டளை ஒன்றினையே கலைஞான உணர்வால் பயன்படுத்திப் பாடுவாராயினர், தன்பால் இதமுற வந்து, உமை, கவிதை செய்கின்றாள்' என இறைவியின் மாட்சிமையினை உணர்த்தி அவளது புகழினைப் பரப்ப 'தமிழ்க்கவிச் செய்குவனே' என இசைப்பாராயினர்.

தன் வாக்குகள் யாவும் இறைவன் இறைவியின் வாக்குகள் என முரசு கொட்டி, தம் மெய்ஞ்ஞானத்தால் 'சொல்லாலும் மனத்தாலும் தொடர வொண்ணாதப் பெருஞ்சோதியினை' தன்னுள்ளத்தில் உண்மை ஒளியாய் காண்கிறார்; அஃது வாக்கினிலேப் படியும் ஒளியாகவும் விளங்குவதை உணர்கிறார். மெய்ப்பொருளான இறை 'உண்மையின் பேர் தெய்வம் என்போம்' எனவும் 'சுத்த அறிவே சிவம் என்று கூறும் சுருதிகள் கேளீரோ' எனவும் இயம்புவார். காண்கின்ற பொருள்கள் யாவும் இறைமைதான் என்ற உணர்வு வந்துற்ற வழி, ஞானி பாரதியார்,

உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம், இங்குப்
பார்க்கின்ற பொருள் எல்லாம் தெய்வம் கண்டீர்'

என்றும்,

'பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்'

எனவும் கொண்டு, இறைவனால் இயங்கப்பெறும் செய்கையினையும் சிந்தனையினையும் காரண காரிய தத்துவங் கொண்டு விளக்கி, சமரச உயர் ஞானத்தை எங்கணும் பரவச் செய்து விடுகிறார்.

இறை போக்கு வரவற்ற புராண காரணனாதலால், இறைவனே மூலப் பழம் பொருளான அருட்சக்தி' எனவும் 'ஓம் சக்தி தனையே சரணமெனக் கொண்டு'

'வேகம் கவர்ச்சி முதலிய பலவினை
மேவிடும் சக்தியை'ப்

பணிவாராயினர். இத்தகைய இறைமை 'உண்மையும் அறிவும் இன்பமுமாகி' முரண்பாடுற்ற பரம நற்பொருளாக மயங்கிக் காட்சியளிக்கும் தெய்வ விளையாட்டுகளைத் தம் மனக் கண்ணில் நிறுத்தி

'இன்பம் என்று உரைத்திடுவார் சிலர்
எண்ணரும் துன்பம் என்று உனை இசைப்பர்'

என்பர். மற்றும் இன்பமும் துன்பமும், களிப்பும் கவலையும் இறைமையின் செயல் எனக் கருதி, மனிதனை மனிதனுக்குவது இடும்பையும் துன்பமுமே என்பதையும் சக்திப் புலவர் உணர்த்துவாராயினர்.

உயிர்கள் உய்யும் படியாக உள்ளத்தில் ஒளிமயமாக இறைவன் உறைந்து ஆன்மாவாக இலங்குவதால், அந்த ஆன்மாவே உண்மைப் பொருள். 'அந்த ஆன்மாவே நீ, நீயே அஃதாம்' ஆதலால் கடவுளில்லை எனப் புகல்வது மனத்துள்ளேப் புகுந்த மாயையின் கூத்து என்பார் பாரதியார். இறையும் உயிரும் வெவ்வேறென இருமை எண்ணம் ஒழிந்து ஒருமை கண்டவர் முன், மாயை நில்லாதென்பது பாரதியாரது சித்தாந்தம்.

இருமை அழிந்தபின் எங்கிருப்பாய், அற்ப
மாயையே! — தெளிந்து
ஒருமை கண்டார் முன்னம் ஓடாது
நிற்பையோ? மாயையே!

என பழித்துரைப்பார். மற்றும் மாயையை சித்தத் தெளிவால் வெல்வது நன்றெனப் பகர்வாராயினர்.

தீது நன்மை யாவும் இறைவனேயாகி நிற்பதால் நிறைந்த ஞானப் பெற்றியினை எய்தப் பெற்றார், வெறுப்புணர்வின்றி பிற ஆன்மாக்கள் தன்னைப் போன்று ஒன்றுதான் என்ற அன்புணர்வுக்குக் காரணமாய ஆன்மநேய ஒருமைப் பாட்டின் மேலீட்டால் 'நன்னெஞ்சே! பகைவனுக்கு அருள்வாய்' என ஞானத்தை போதித்து பகையுணர்வு ஓர் வகை புகையுணர்வு என ஞானபாரதியார் குறிப்பிப்பாராயினர். புகை நடுவில் தீ யிருப்பது போன்று,

'புகை நடுவினில் தீ யிருப்பதைப்
பூமியிற் கண்டோமே நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே.
'பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழுகின்றான் — நன்னெஞ்சே!
பரமன் வாழுகின்றான்

எனக் கூறிப் பகைவனது உள்ளத்தே உறையும் பொருள் பகவானாய் இருப்பதால், பகைவனை வெறுக்காது, அன்பொடு சிந்தையில் பகைவனுக்கு அருள் புரிவாய் நன்னெஞ்சே! எனப் பசுகு தமிழில் எளிதாகவே இனிமையுற இயம்புகிறார். மற்றும்

நன்னெஞ்சே!
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவான் என்ற
சாத்திரங் கேளாயோ

என அறிவுறுத்துவார். மற்றும் பகைவனுக்குக் கேடுசூழச் செய்வது தமக்குத்தாமே கேடு தேடுவதாகுமெனக் கூறிப், பகைவருக்கு அன்பும் அருளும் காட்டுவதின் வழி, நம்மை நாமே ஞானத்து நன்னெறியில் படிவச் செய்வதாகும் எனப் பகர்ந்து,

'வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ'?

என்பதின் வழி, பகைவருக்குத் தாழ்வினை எண்ணித் தானே தாழ்வினை வருவித்துக்கொள்ளுதல் நன்றன்று எனப் போதிப்பாராயினர்.

ஞானநல்வழியில் படிவதால், பரமாத்மாவும் ஆத்மாவும் ஒன்றேயென்ற முடிபினை உணர்ந்த நிலையினையுடையார்

'அத்வைத நிலை கண்டால் மரணமுண்டோ?'

என்ற வினுவினைப் பாரதியார் எழுப்பி, இறையோடிசைந்து முக்தி நிலை பெறும் உயிருக்கு மரணமில்லையென்ற மெய்ஞ்ஞான உண்மையினைத் தெளிய வைத்து, உயிர் ஊதியம் இயல்பாய் அடையும் வழியினையும் எடுத்துக் காட்டியுள்ளார். மற்றும்,

'கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டும் மறைகளெல்லாம்' எனப் புகன்று
'கவலை யற்றிருத்தலே முக்தி'

என இசைப்பாராயினர். இத்திறத்தால், பயன்கருதாது கடமையினை ஆற்றி உழைக்கவும், தெய்வக் காதலில் சிறந்து பக்தி செய்து பாங்குடன் பிழைக்கவும் பல உளவுகளை ஞானக் கவிஞர் கூறுகிறார்.

'சுடர்கால் கடல் புவியைத் தோற்றி நமையாளுங்
கடவுட் கீந்துன்னைக் களி;
எனதென தென்றல் இடராகும் என்றும்
அவனது வென்ன அருள்'

என்றதால் முறுகிய பக்தியில் உறுதியாய மன நம்பிக்கையும் நிரா

சையுங் கொண்டு இறைபால் பரபக்தியும் அபர பக்தியும் பேணுவது நலமென நவில்வார் ஞான பாரதியார்.

பொதுவாக உயர்ந்த நிர்க்குண உபாசனையிலும் வழிபாடதனிலும் அமையாது அகத்தேயுள்ள இறைவனை நம்பிக்கையுடன் அன்பு நெறியில் ஒருமையுடன் சிந்தித்து இறை அறிவை அனுபவத்தில் பெற்று, இறைவனது பேரன்பில் திளைப்பது பாரதியாரின் ஒருவித எளிய உபாயம். அவருக்கு,

'ஒன்றுமே வேண்டார் உலகனைத்தும் ஆளுவார்காண்;
என்றுமே இப்பொருளோடே காந்தத் துள்ளவரே'

என்பதற்கேற்ப, தியானத் துறவு மூலம் அறிவான கடவுளை அடைதலும் ஒரு திருநெறியாகும்.

'எண்ணமிட்டாலே போதும் எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே ததும்பப் புரியுமடா!

என்றதினால் அன்பும் பக்தியும் கொண்டு இறைவனைச்சிரத்தையுடன் சிந்தித்துச் செய்யும் அருவுரு வழிபாடு கடவுளின்பம் பயக்கவல்லதென்பது ஞானக் கவிஞனின் உட்கோள்.

'உருவைத் தொழுதெண்ணி யுள்ளொளியைக் கண்டு
யுருவிலொடு தேவை யுணர்,

என பாரதியார் கூறுதலால், கடவுளைத் தொழுது சரணடைந்து ஆண்டான் அடிமைத் திறத்தின் மூலம், காதலன், காவலன் எனும் முறையில், பல பாவனைகள் பொருந்தியுள்ள காதலுறவு காரணத்தாலும், உருக்கமும் பணிவும் பூண்டு தெளிவுடன் அன்பு நெறியில் வழிபாடு புரிந்து இறைபால் இரண்டறக் கலத்தல் ஞானி பாரதிக்குக் கைவந்த உவமையிலாக் கழிபேரின்பம்.

(தொடரும்)

தமிழ்த் தொண்டின்பம்

சிந்தாமணியே என்னுடைய தமிழ் நூற்பதிப்பில் முதல்அரும்பு. வழக்கொழிந்த பழந்தமிழ் நூல்களை அறிவதற்கும் ஆராய்வதற்கும் அச்சிடுவதற்கும் என் உள்ளத்தைப் பக்குவப் படுத்தி ஊக்கமூட்டியவை அந்த நூலும் அதன் உரையுமே தமிழ்த் தொண்டினால் இன்பம் உண்டென்னும் உண்மையை எனக்கு முதன்முதலில் வெளிப்படுத்தியது அந்த நூலே.

—முனைவர் உ. வே. சா

தமிழில் சந்தப் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும்.

மா. சற்குணம், எம். ஏ.,
மயிலம்.

சந்தம் என்ற சொல்லிற்கு அழகு, நிறம், வடிவு, சுகம், செய்யுளின் வண்ணம் எனப் பல பொருள்கள் உள. இறுதிப் பொருண்மையில் மட்டுமே இங்கு இச்சொல் கையாளப்படுகிறது. இதற்கு, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி 'Musical flow — Rhythmic movement of a verse' என்று ஆங்கிலத்தில் விளக்கம் தருகிறது.[1] பேராசிரியர், பாட்டு என்பதற்கு எழுதியுள்ள உரை ஈண்டு நம் சிந்தனைக்குரியது. பா என்பது, சேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் ... ... இன்ன செய்யுள் என்று உணர் தற்கு ஏதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை என்பர்.[2] செய்யுள் என்பதை நாம், 'இசைச் சிந்தனை' என்று அழைக்கலாம் என்பர்.[3] ஓசை ஒழுக்குடன் கூடிய அழகின் படைப்பே கவிதை யாகும் என்பது மேலை நாட்டறிஞர் எட்கர் ஆலன் போவின் கருத்து. எனவே பாடல்கள் அனைத்தும் ஓசையுடன் தொடர்புடையனவே என்பதில் ஐயமில்லை, ஒரு பாடலின் எல்லா அடிகளும் குறிபிட்ட தோர் ஓசை அமைப்பிலேயே இயங்குமாயின் அதனைச் சந்தப்பாடல் எனலாம். இவ்வாறமைந்த சந்தப்பாடல்கள் தமிழில் இடம் பெற்றுள்ளவாற்றை அறியப் புகுவதே இக்கட்டுரை வரைவதன் நோக்கம் ஆகும்.

சந்தப்பாட்டு என்பதற்கு திவாகர நிகண்டு நான்கு எழுத்து முதல் இருபத்தாறு எழுத்து வரையுள்ள அடிகள் நான்கு கொண்ட பாவகை என விளக்கம் தருகிறது. எந்த யாப்பில் சந்தம் அமையு மாறு பாடல் எழுதப்பெறுகிறதோ அந்த யாப்பின் பெயரைச் சந்தத் துடன் சேர்த்துக் குறிப்பதுண்டு. சான்றாக விருத்தப்பா இனத்தில் எழுதப்பெறின் அப்பாடல் சந்தவிருத்தம் எனப்பெறும். தமிழில் சந்தம் என்பது வண்ணம் என்ற சொல்லாலும் குறிக்கப்பெறுகிறது.

---

1. Madras University, Tamil Lexicon, Vol III, Part I, P. 1263.
2, தொல்காப்பியம் செய்யுளியல் முதல் நூற்பாவிற்கு, பேராசிரியர் உரை.
3 An Introduction to the Study of Literature. W. H. Hudson, P. 63.

இம்மொழியில் கிடைத்த முதல் நூலாகிய தொல்காப்பியமே இச் சொல்லைத் தன்னகத்துக் கொண்டுள்ளது.

வண்ணம் என்பது குறித்துத் தொல்காப்பியர் விரிவாக இலக்கணம் செய்துள்ளார்.[4] வண்ணங்கள் இருபது வகைப்படு மென்பதை அவற்றவற்றுப் பண்புகளோடு வெளிப்படுத்தியுள்ளார். அவர் சொற்களின் ஊடே பயின்றுவரும் அசைத்தொடர்க் கூட்டங் களின் ஓசை அமைதிகளையே வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்பனவாகக் குறிப்பிட்டுள்ளதாகத் தோன்கிறது.

தொல்காப்பியருக்குப்பின் சங்க இலக்கியப் பாடல்கள் பல இசைச் போக்குகளைப் புலப்படுத்துகின்றன. அவற்றைவிடச் சந்தச் சாயலைச் சிலப்பதிகாரத்தின் வரிப்பாடல்கள் சிலவற்றில் காண முடிகிறது. பின், இறைவனை ஏழிசையாய் இசைப் பயனாய்க் கண்ட பக்தி இயக்க காலத்திலேயே நாம் அறியும் சந்தப் பாடல்களுக்கு வித்திடப் பட்டதெனலாம். 'அருச்சனை பாட்டேயாகும்' என்ற முறையில் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்து இறைவனைப் பரவிய ஞானசம்பந்தப் பெருமானே சந்தப் பாடல்களுக்கு வித் திட்டவராகக் கருதப்பெறுகிறார், இவருடைய தேவாரப் பாடல் களின் பண்மைப்புக்கள் மிகவும் போற்றப் படுவனவாகும்.

சைவ சமயத்தில் ஒரு திருஞானசம்பந்தர் தோன்றியது போல வைணவ சமயத்தில் ஒரு திருமழிசையாழ்வார் தோன்றி, இசைத் தமிழ்ப்பாக்கள் பலவற்றைப் பாடியருளினார், 'திருச்சந்தவிருத்தம்' என்ற அவர்களுடைய தலைப்பே இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

பின், பட்டினத்துப் பிள்ளையார் என்று போற்றப்பெறும் திருவெண்காட்டு அடிகள் சில சந்தப் பாடல்களைப் புனைந்துள்ள மையைக் காண்கிறோம்.[5] தனியே சந்தப்பாடல் என்ற வகையில் எழுதி அருணகிரியாருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இவரே, பதினோராம் திருமுறையிலுள்ள இச்சான்றோரின் படைப்புக்கள் குறிப்பிடத்தக்க முதற்காலச் சந்தப்பாடல்களாகும்.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் என்ற புகழ் வாய்ந்த ஞானி சந்தப் பாடல்களாகவே எழுதிக்குவித்து மிகு புகழ் பெற்றார். சந்தப்பாடல்கள் என்றாலே உடன் நினைவுக்கு வருவது

4. தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா 204 முதல் 226 வரை.
5. கோயில் நான்மணிமாலையில் 11, 15, 39 முதலிய எண்கள் உள்ள பாடல்கள் சான்று.

அருணகிரிநாதரின் பெயர்தான். குமரகுருபரனை அவர் 'டமட டமடம' எனும் ஓசையினாலேயே கண்டவராயிற்றே! உள்ளார்ந்த அன்புடன் அவர் பல பாடல்களில் ஞானசம்பந்தரைக் குருவென மதித்துப் போற்றியுள்ளமையைக் காணலாம். முருகனை வணங்கிய அவர் முருக அவதாரம் என்று கருதப்பெற்ற திருஞானசம்பந்தரை வணங்கியதில் வியப்பில்லை அல்லவா?

அருணகிரி நாதரின் படைப்புக்கள் 'திருப்புகழ்' என்ற பெயரில் வழங்கப் பெறுகின்றன. பதினாறாயிரம் பாடல்களை அவர் பாடினார் எனக் கூறப்பெறினும் தணிகை மணியின் பெருமுயற்சியினால் இது வரை கிடைத்துள்ள பாடல்கள் ஆயிரத்து முந்நூற்று முப்பது மட்டுமே. இவையனைத்தும் இசையோட்டத்துடன் கூடிய இனிய பக்திப் பாடல்கள் ஆகும். திருப்புகழ் மட்டுமன்றிக் கந்தரலங்காரம், கந்தரனுபூதி, மயில் விருத்தம் முதலாகிய வேறு சில நூல்களும் கிடைத்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புகழ் சந்தப் பாடல்கள் தன்னிகரற்றதோர் உயரிய இடத்தைப் பெற்றுள்ளன. பயில்வோரின் உள்ளங்களைச் சிறப்பான தம் சந்தக் குழிப்பின் இனிமையால் பிணிக்கும் ஆற்றல் வாய்ந்தவையே இப் பாடல்கள். சந்த அமைப்பில் அதுவரை இல்லாத ஓர் புதிய வகையைப் புகுத்திப் புகழடைந்தவர் அருணகிரி நாதரே ஆவார். ஒவ்வொரு வரியின் இறுதியிலும் தொங்கல் எனப்படும் ஓர் தனிச் சந்தத்தை அமைத்துப் புதுமை கண்டார். மதாணி என்று குறிக்கப் பெறும் இச்சந்த அமைப்புமுறை அவருடைய படைப்புகளின் சந்தங் கட்குத் தனித்தன்மையை ஈட்டித் தந்தது. இத்தகு சிறப்புக்களால் அவர் 'சந்தப் பாவல பெருமான்', 'நாற்கவிராசர்' முதலான சிறப் புப் பெயர்களையும் பெற்றார்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் இராமாயணக் கதை பாலபாரதி என்பவரால் சந்தப் பாடல்களால் எழுதப் பெற்றது என்பர்.[6] இக் காலத்தைச் சேர்ந்த குறுவை இராமனுசதாசர் என்பார் பெருமாளுக்குரிய நூற்றெட்டுத் திருத்தலங்களைக் குறித்தும் நூற்றெட்டுச் சந்தப்பாடல்கள் இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

17-ஆம் நூற்றாண்டில் குமரகுருபர சுவாமிகள் செந்தூர் முருகன் திருவருளதனால் செஞ்சொற் பேசும் திறமது பெற்றார் என்று அறிகிறோம். [7]அவரும் தாம் இயற்றியருளிய பிள்ளைத் தமிழ், கலம்பகம் ஆகிய இரு சிற்றிலக்கிய வகைகளில் சந்தப் பாடல்கள்

6. Arunagirinathar 6th Century Volume P. 103
7. நாற்பதுக்கும் மேலான சந்தப் பாடல்களைப் பாடியுள்ளதாக அறிகிறோம்.

பலவற்றைப் பாடியுள்ளார்.7 இந் நூற்றுண்டிலேயே வாழ்ந்த அழகுமுத்துப் புலவர் என்பார் முருகனின் சிறப்புக்களை நூறு பாடல்களில் பாடித்'திறப்புகழ்' என்றோர் நூலினைச் செய்துள்ளார்.8 இப்படி எத்தனைபேர் பிற்காலத்தில் முயன்றிருந்தும் கூட அருணகிரியாரின் பெரும்புகழைச் சந்த உலகில் யாராலும் பெறமுடியவில்லை.

சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த பெரும்புலவர் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தைச் சார்ந்த தண்டபாணி சுவாமிகள் எண்ணற்ற சந்தப் பாடல்களைப் பாடி அருணகிரியாருக்குப் பின் பெரும் புகழ் பெற்றுர் எனலாம். 'வண்ணச் சரபம்' என்று போற்றப்படுபவரும் அவரே. சரபம் என்பதற்குப் பறவைகளின் அரசன் என்று பொருள். அதுபோல வண்ணம் பாடுவோருள் தலைமை சான்றவர் என்ற பொருளில் இப்பெயர் அவருக்குரித்தானது. இதுவரை கண்ட சந்தப்பாடல் வரலாற்றில் சிறந்த படைப்பாளராக மட்டுமன்றி இலக்கண ஆசிரியராகவும் திகழ்ந்தவர் இவர் மட்டுமே. வண்ணப் பாடல்களுக்குரிய அடிப்படைக் கோட்பாடான 'வண்ணம்'என்பதன் பல வகைகளைப் பற்றி 9'வண்ணத்தியல்பு' என்ற அரியதோர் இலக்கண நூலில் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் இரண்டாம் குருமகா சந்நிதானமாகிய தவத்திரு கந்தசாமிசுவாமிகள் நூற்றுக்கணக்கான சந்தப் பாடல்களை யாத்துள்ளார்கள். சென்ற நூற்றுண்டிலேயே இரெட்டியாப்பட்டி சுவாமிகள் என்பாரும் பல சந்தப் பாடல்களைப் புனைந்துள்ளார் என அறிகிறோம். வாழ்ந்து வரும் கவிஞர்களில் சிலரும் சந்தக் கவியுலகில் சொந்தம் கொண்டாடுவதைக் காண முடிகிறது.

இவ்வாறு தனக்கெனத் தனியானதொரு நெடிய வரலாற்றைப் பெற்றிருக்கும் இச்சந்தத் தமிழ், தனித்து விரிவாக ஆராயப்பட வேண்டியதொரு தலைப்பாகும். பொதுவாக இது பல தரப்பினராலும் வளர்க்கப் பெற்றிருப்பினும் கூடச் சிறப்பாக முருகனடியார்களாலேயே பெரும் வளர்ச்சியுற்றது என்பதை யாரும் மறுக்க இயலாது. தமிழ்க் கடவுளாம் முருகனின் அடியார்கள் வளர்த்த வண்ணத் தமிழை இசைத் தமிழுடன் இணைத்து ஆராய வேண்டியதும் அவசியமாகும்.

---

8. அருணகிரிநாதர் பாடல்களின் சந்தஅமைப்பும் தாள அழகுகளும் — பை. கி. ராஜகோபாலய்யர்.
9. வண்ணத்தியல்பு — பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடப் பதிப்பு.

அழன்

பெ. சுயம்பு

தொல்காப்பியத்தில் புள்ளிமயங்கியலிலும் உருபியலிலும் 'அழன்' என்னும் சொல் எடுத்தாளப்பெறுகிறது. இதன் உண்மை யான தொல்வடிவத்தைப் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

* 'அழன்' என்பது ஏனையை னகர ஈற்றுச்சொற்களி னின்றும் வேறுபட்ட சந்திவிதியினைப் பெறுகிறது. வேற்றுமைப் பொருட்சந்தியில் னகரஈறு றகரஈறாக மாறும் என்பது னகர ஈற்றுச் சந்திக்கான பொதுவிதி. இவ்விதியுள் அடங்காத சொற் களைத் தொல்காப்பியம் தனித்தனியே எடுத்துரைத்துச் சிறப்பு விதிகளை வரையறுக்கின்றது.

எவ்விதமாற்றமும் பெறாமல் னகர ஈறு இயல்பாகவே வருவது (குயின் குழாம்) —— இயல்பாகவும் றகரமாகத் திரிந்தும் பொருள் மாற்றம் இன்றி உறழ்ச்சியில் வருவது (மீன்கண் N மீற்கண்) —— தொழிற்பெயர்கள் உகர ஒலித்துணை பெறுவது (பன்னுக்கடுமை) ——— பொருள் வேறுபாட்டைப் புலப்படுத்துமாறு வேறுபட்ட சாரியைகள் ஒரே சொல்லுடன் வருவது (எகினங் கூட்டம், எகினக்கூட்டம்) ——— முயற்சிச் சுருக்கம் காரணமாகச் சுருங்கிய மரூஉ வடிவங்கள் (ஆந்தை, பூந்தை) ஆகியவை னகர ஈற்றுக்குச் சொல்லப்பட்ட சிறப்பு விதிகள்.

'அழன்' என்னும் சொல் இவ்விதிகளுக்குள் அடங்காது மகர ஈற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்ட விதிகளை ஏற்கிறது.

'' மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே ''

(தொல், புள்-15)

—ம் + வல்லெழுத்து — > — ∅ வல்லெழுத்து —
+ வல்லெழுத்து

மரம் + கிளை > மரக்கிளை.

'' அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே ''

(தொல், புள்-59)

— ன் + வல்லெழுத்து— > — ∅ வல்லெழுத்து —
+ வல்லெழுத்து —

அழன் + குடம் > அழக்குடம்.

*இப்புறச்சந்தி ஒற்றுமை ‘அழன்’ என்னும் சொல்லின் இறுதி எழுத்தினை மகரத்தோடு தொடர்பு படுத்துமாறு தூண்டுகிறது.

வேற்றுமை உருபு பெயர்ச்சொல்லின் ஈற்று எழுத்தோடு இணைகின்ற ‘அகச்சந்தி’யிலும் ‘அழன்’ என்னும் சொல்லை மகர ஈற்றுச் சொற்களோடு ஒருங்கே வைத்து எண்ணத்தக்க இயல்பு வெளிப்படுவதைக் காணலாம்.

மகர ஈற்றுப் பெயர்ச் சொற்களோடு வேற்றுமை உருபு இணையும்போது ‘அத்துச்’ சாரியை இடையில் வரும் என்பது மகர ஈற்றுக்கான பொதுவிதி. இப்பொது விதிக்குள் அடங்காத சில சொற்கள் ‘இன்’ சாரியையினை ஏற்கின்றன. இவ்விரு சாரியைகளையும் ‘அழன்’ ஏற்கிறது.

“மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை”
(தொல், உரு. 13)

“இன்இடை வரூஉம் மொழியுமார் உளவே”
(தொல். உரு. 14)

“அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்தது என்ப உணருமோரே” தொல், உரு. 21)

மரம் + ஐ > மரம் + அத்து + ஐ > மரத்தை
உரும் + ஐ > உரும் + இன் + ஐ > உருமினை
அழன் + ஐ > அழன் + அத்து + ஐ > அழத்தை
அழன் + ஐ > அழன் + இன் + ஐ > அழனினை

அத்துச் சாரியை ஏற்பதிலும் ‘அழன்’ மகர ஈற்றோடு ஒத்த செயற்பாட்டினையே பெற்றுள்ளது. விண், வெயில், இருள் முதலிய புள்ளியீற்றுச் சொற்களும் ‘அத்து’ச் சாரியை ஏற்கின்றன ஆயினும், இவற்றுக்கும் மகரஈற்றுச் சொற்களுக்கும் இடையே சந்திச் செயற்பாட்டில் வேறுபாடு காணப்படுகிறது. விண், வெயில், இருள்போன்ற சொற்கள் எவ்வித மாற்றமும் இடையே பெறாமல் நேரடியாகவே ‘அத்துச்’ சாரியையினை ஏற்கின்றன. விண்ணத்துக் கொண்டான், வெயிலத்துக் கொண்டான், இருளத்துக் கொண்டான் என ஈற்றுப்புள்ளி உயிர்ஏற இடங் கொடுக்கிறது. ஆனால்,

மகரஈற்றுச் சொற்களோடு ' அத்துச் ' சாரியை இணையும்போது மகரஇறுதி கெடுவதோடு அத்துச்சாரியையின் அகரமும் கெடுகிறது. மகரஈற்றின் இந்தச் சந்திவிதியை எவ்வித மாற்றமும் இன்றி ' அழன் ' ஏற்கிறது.

எனவே, ' அழன் ' என்பதற்கு ' அழம் ' என்ற வடிவமும் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்தது எனக்கருதினுல் தவறாகாது.

தொல்காப்பியர் ' அழன் ' என்று னகர வீற்றுச் சொல்லாகவே கூறுவதனால் னகரஈற்று வடிவமே எழுத்து மொழியில் வழங்கிய தொல்வடிவம் என்றும், னகரஈறு இதழின் சாயல் பெற்றதனால் தோன்றிய மகரஈற்று வடிவம் பேச்சுவழக்கில் பெரிதும் ஆட்சி பெற்றிருந்தது என்றும், அதன் ஆட்சியின் செல்வாக்குப்பற்றியே தொல்காப்பியர் அழன் என்பதற்கும் மகரஈற்றுச் சந்திவிதிகளை இணைத்திருக்கலாம் என்றும் கருதலாம்.

னகர ஈறு இதழின் சாயல் பெற்று வழங்குவதை இக்காலப் பேச்சு வழக்கிலும் பெருவாரியாகக் காணலாம்.

அவன் > அவ¯ *அணிகலம் > அணிகல¯*
புலவன் > புலவ¯

பேச்சுவழக்கிற்குச் சிறப்பிடம் தராத உரையாசிரியர்கள் ' அழன் ' என்பது ' அழம் ' என உறழ்ந்து வராது எனக் கொண்டிருக்கலாம். இக்கருத்தே மகரத்தொடர்மொழி மயங்குதல் வரைந்த னகரத்தொடர்மொழி ஒன்பஃதனோடு 'அழன்' என்பதையும் சேர்த்துப்பார்க்குமாறு அவர்களைத் தூண்டியிருக்கிறது. உண்மையில் அழன் என்பது அழம் என உறழ்ச்சியில் வரக் கூடியதே.

உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என்னும் ஒன்பது சொற்களும் மகர ஈறாக உறழப்பெறாதவை என்று எடுத்துக்காட்டிய இளம்பூரணர் 'இவற்றுள் திரிபுடையன களைக' எனக் கூறுவதனால் மகரமாக உறழ்ந்து வந்த சொற்களும் இவ்வொன்பதனுள் பேச்சுவழக்கில் இளம்பூரணர் காலத்தில் வழங்கின என்றும் அவற்றுள் ' அழன் ' என்பது ஒன்று என்றும் கருதலாம்.

'அழன்' என்பதற்குப் 'பிணம்' என்ற பொருளை உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதே பொருளில் 'சழன்' என்னும் சொல் தென்கோடித் தமிழகத்தில் பேச்சு வழக்கில் நிலவுகிறது.

வெளியாரின் தொடர்பு அதிகமாக ஏற்பட முடியாத நில அமைப்பினை உடைய கன்னியா குமரி மாவட்டத்தின் அகத்தீசுவர வட்டாரத்திலும் நெல்லை மாவட்டத்தின் இராதாபுரம், நான்கு நேரி, தென்சாத்தான்குளம் (இவ்வட்டங்கள் கன்னியா குமரி மாவட்டத்தின் எல்லையில் உள்ளவை) வட்டங்களிலும் 'பிணம்' என்னும் பொருளில் 'சழன்' என்னும் சொல் பேச்சுமொழியில் வழங்குகிறது.

குறைந்த மதிப்புடைய பொருளை இழந்ததனால் மிகவும் வருந்திக் கொண்டிருப்பவனை நோக்கி, 'சழென உடு' என்றும் அந்தச் சழத்தெ இனி நெனெச்சிக் கிட்டிருக்காதெ' என்றும் 'சழ— தொலெஞ்சி வூட்டே மொழுவு' என்றும் ஆறுதல் கூறும் வழக்கு உள்ளது. இச்சான்றுகளில் 'அத்துச்சாரியை' பெற்ற 'சழம்' என்ற வடிவத்தையும் சழன் என்ற வடிவத்தையும் காண்கிறோம்.

பிணத்தை வீட்டிலிருந்து அப்புறப்படுத்திச் சுடுகாட்டிற்குக் கொண்டு போனதும் வீட்டைப் பசுஞ்சாணத்தால் மெழுகுவது இன்றும் வழக்கத்திலுள்ளது.

'தென் திராவிட மொழி முதற் சகரம் இழப்பு' என்ற கட்டுரையில் பேராசிரியர் பர்ரோ அவர்கள் குறிப்பிடும் செய்திகள் 'சழன்' என்பதே 'அழன்' என்னும் சொல்லின் தொல்வடிவம் என்று கொள்வதற்கு உறுதுணை புரிகின்றன.

தொல் திராவிட மொழிச் சொற்களில் உள்ள மொழிமுதற் சகரம் தென் திராவிட மொழிகளில் இழப்புற்றுக் காணப்படுகிறது என்கிறார் திரு. பர்ரோ

தமிழ் <u>அரவு</u> <u>அரவம்</u> குயி. <u>ஸ்ராஸு</u>

அழல் < தழல் < சழல்

பெரும்பான்மையான சொற்களில் மொழி முதலில் சகரம் இழப்புற்றிருக்கச் சில சொற்களில் சகர இழப்பும் இழவாமையும் ஆகிய இரு வடிவங்கள் காணப்படுகின்றன. சிமிழ்—இமிழ் போன்ற வடிவங்களைத் திரு. பர்ரோ இதற்குச் சான்றாகக் காட்டுகின்றார்.

மொழி முதற் சகர இழப்புத் தமிழ் மொழியில் தொல்காப்பியர் காலத்தில் ஓரளவு ஆட்சி பெற்றிருந்தது என்பதைத் தொல்காப்பிய நூற்பா உறுதிப்படுத்துகின்றது.

அ, அய்(ஐ), அவ் (ஔ) என்னும் உயிர்க்கு முன் சகரம் [ச் + அ –[மொழி முதலில் வராது (தொல். மொ-29) என்கிறது தொல்காப்பியம். இச்சூழலில்]ச் + அ –] சகரம் மொழி முதலில் வருகின்ற சொல் ஒன்றேனும் தொல்காப்பியரின் மொழியில்[Language of Tolkappiyam) காணப்படவில்லை என்பது இவண் குறிப்பிடத் தக்கது.

மொழி முதற் சகர இழப்பு 'சழன்' என்னும் சொல்லிலும் ஏற்பட்டு 'அழன்' என்னும் வடிவமே தமிழகத்தின் பெரும்பான்மையான பேச்சு வழக்குகளில் தொல்காப்பியர் காலத்தில் நிலவியிருக்கவும், தென்கோடிப் பகுதியில் மட்டும் 'சழன்' என்பது நிலவிற்று. எல்லாவட்டார வழக்குகளையும் அறியும் வாய்ப்பு ஓர் இலக்கணிக்கு அத்துணைச் சாத்திய மன்று. ஆதலால், பெரும்பான்மை வழக்கிலிருந்து தான் அறிந்திருந்த வடிவமாகிய 'அழன்' என்பதையே தொல்காப்பியர் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

இக்கட்டுரை பின்வரும் முடிபுகளை வெளிப்படுத்துகின்றது.

1 'அழன்' என்பதன் தொல்வடிவம் 'சழன்' என்பதே.

2 'சழம்' என்பது ஈற்றண்ண ஒலி (னகரம்) ஈரிதழ் ஒலியாகப் பேச்சு வழக்கில் மாறி ஒலிக்கப் பெறும் உறழ்ச்சி வடிவமே.

3 ன் √ ம் எனும் உறழ்ச்சி தொல்காப்பியர் காலத்திலேயே நிலவியதனால் மகர வீற்றுச் சந்தி விதிகளோடு ஒத்த விதிகளை 'அழன்' என்பதற்கும் கூறியுள்ளார்.

துணைபுரிந்த நூல்கள்:

1 இளம்பூரணர், தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், தி. தெ. சை. சி. நூ. கழகம், சென்னை, 1972.

2 நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், தி. தெ. சை. சி. நூ. கழகம், (சென்னை, 1944.)

3 Burrow, T., Collected Papers on Dravidian Linguistics, Annamalai University 1968.

இலக்கிய இலக்கண வினா விடை

வினாக்கள்.

1. மதுரைக் காஞ்சியில் வருகின்ற 'நாவாய்' என்ற சொல்லுக்கும் ஆங்கிலத்தில் வருகின்ற 'நேவல்' என்ற சொல்லுக்கும் ஒற்றுமை இருக்கிறதா ?
2. ஆந்தை குடிஞை, கூகை, கோட்டான், ஆகிய சொற்களின் வேர்ச்சொற்கள் யாவை ?
3. எந்திரம் மந்திரம் ஆகியன தமிழ்ச்சொற்களா ?
4. அமணர், உமணர் ஆகிய சொற்கள், ஒற்றுமையாக அமையக்காரணம் யாது ?
5. '' கவ்வையாற் கவ்விது காமம் '' (1144)
'' ஊரவர் கௌவை எருவாக '' (1147) எனவரும் திருக்குறள்களில் ''கவ்வை'', ''கௌவை'' என்று எழுதப் பட்டுள்ளன. இவ்வாறு இருவகையாக அமையக் காரணங்கள் யாவை ?

இரா. சேரலாதன்,
கரந்தை.

விடைகள்

1. ஒற்றுமை இருக்கிறது. பழந்தமிழ் நீர் ஊர்திகளைக் குறிக்கும் கடம்பு—மிதவை—ஓடம்—அம்பி—தோணி—பட(ர்)கு –கப்பல் முதலிய சொற்களுக்கு வேர்ப்பகுதிகள் தமிழாகவே உள. நாவாய் என்பதற்குரிய மூலம் புலனாகவில்லை. சங்கப்பாக் களில் இச்சொல் பெரும்பாலும் போர்க்கலங்களைச் சுட்டியே வருதலின் 'நேவல்' என்னும் சொல்லோடு ஒற்றுமை கொண்டுள்ளது. இது கிரேக்கரின் தொடர்பினால் தோன்றிய தாகக் கருதவேண்டியுளது. சங்கச் செய்யுட்களில் இச்சொல் வழங்கி வருதலின் மிகத்தொன்மையான திசைச்சொல் எனப் புலனாகின்றது.
2. ஆந்தை—குடிஞை—கூகை—கோட்டான்: இவற்றுள் ஆந்தை என்பது அந்திப் (பறவை) என்னும் (செய்யுட் சொல் நான் கனுள்) வடசொல்லின் திரிபாக்கம், ஏனைய இயற்சொல் இவற் றிற்கு முறையே கொடி (புகை) கூ(வு) கோடு (மரக்கிளை) என்பவை அடிச்சொல்லாகும். புகைபோன்ற நிறமுடையதாய் '' ஞை '' என்னும் இரங்கற் குறிப்பொலியை எழுப்புவதால்

'குடிஞை' என்னும் பெயர் பெற்றது.
கூகையும் கோட்டானும் ஒன்றே. மரப்பொந்தில் உறைவதை கூகை என்றும் மரக்கிளையில் உறைவதைக் கோட்டான் என்றும் வழங்குதல் மரபு.
''மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்'' என்பது தொல்காப்பியம்.

3. எந்திரம் [இயந்திரம்] — பொறி என்னும் பொருளிலும், மந்திரம் — நிறைமொழிமாந்தர் ஆணை என்னும் பொருளிலும் வருங்கால் தமிழ்ச்சொற்களாம். இவை முறையே இயக்கம்–மாந்தர் என்னும் சொல்லடியாகப் பிறந்தவை.

4. அமணர் வேறு உமணர் வேறு; அமணர் என்பது ஜினர் என்பதன் தந்திதமாகிய ஜைனர் என்னும் சொல்லின் தமிழாக்கம். இது முதற்கண் சமணர் எனத்திரிக்கப்பட்டுச் சகரம் மொழி முதலாகாமையின் அமணர் என வழங்கலாயிற்று. சமணருள் ஒருசாரார் ஆடை நீத்தவர் ஆதலின் அம்மணர் அம்மணம் என்பவை அதன் வழிப்பிறந்த வழக்காகும். உமணர் என்பது உப்பின் தொடர்புடையாரைக் குறிக்கும். இஃது உவர்+மண் என்னும் இருசொல் சுருங்கிய ஒருசொல் (உவர்ப்பு—உவப்பு—உப்பு எனவரும்) உவர்மண்—உம்மண் உமண் எனவரும். உமண் என்பது அர் விகுதி சேர்ந்து உமணர் எனவந்தது.

5. கௌவை—கவ்வை : கௌவை என எழுதுவதே தொல்காப்பியநெறி. 'ஔ' என்பதற்கு (அஉ) ''அவு'' என்பது மட்டுமே போலியாக வரும் எனத் தொல்காப்பியம் வரைகின்றது. இடைக்கால இலக்கண நூலார் 'அவ்' என்பதையும் போலியாகக் கூறியிருப்பதனால் ஏற்பட்ட மயக்கத்தின் விளைவே இவ்விருவகை வடிவங்கள் தோன்றக்காரணமாம்.

விடையெழுதியவர் பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

பயிற்றுமொழி

கல்வியானது உலகில் வழங்கும் பல மொழிகளானும் எய்தற்பாலதே யெனினும், தாய்மொழியிற் கற்றலென்பது ஒவ்வொருவர்க்கும் பிறப்பானுரிய கடன்களுள் விழுமிய தொன்றாம்.

நாவலர். ந. மு. வே.

ஆனித் திங்கள்

வெண்பாப் பரிசுப் போட்டி முடிவு

† முதற் பரிசுபெற்ற வெண்பா :

1. செந்தமிழ்க்குத் தம்முழைப்பைச் செல்வத்தைத் தேர்ந்தளித்துச்
சிந்தனையினை வள்ளுவத்திற் சேர்த்தொழுகி—முந்தப்
புலமொத்தார்ப் பேணிப் பொதுநலங்கைக் கொள்வோர்க்(கு)
உலகத்தார் செய்வர் சிறப்பு.

இரா. சுப்பிரமணியன் (இளவழகன்)
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

2. கோணல் வழிச்சென்று 'கோடி' மலை ஏறிகட்கு
நாணில் நரியரசு வாதிகட்கு,—வீணில்,
கலகத்தை மூட்டிவரும் காலிகட்கே அந்தோ!
உலகத்தார் செய்வர் சிறப்பு!

கவிஞர். காங்கேயம் தமிழேந்தி,
அரசு மேனிலைப்பள்ளி, காங்கேயம்
பெரியார் மாவட்டம்.

3. தக்கார் இனத்தவராய்த் தாம்புரியும் தொண்டாலே
எக்காலும் மன்னுயிர்கள் இன்புறவே—தொக்க
நலங்கொள்ளும் தம்முயிர் போல்நாடுவார் தம்மை
உலகத்தார் செய்வர் சிறப்பு.

அரங்க. அறமன்னன்.

4. எம்மொழியில் எக்கலைகள் எங்கெங் கிருந்தாலும்
நம்மொழியில் செம்மையுற நாம்கொணர்வோம்—நம்முன்
கலகத்தேர் ஓட்டாமல் கட்டுண்டு வாழ்வோம்!
உலகத்தார் செய்வர் சிறப்பு.

புலவர். கனகமணியன் பி. லிட்.
செந்தில் பண்டகம்,
வெங்கமேடு, கரூர்.

5. தன்னை மறந்தவனைத் தன்மானம் உள்ளவனை,
என்றும் பிறர்நலம் என்பவனை—முன்னே!
பலகல்லான் என்ருலும் பாராமல் இந்த
உலகத்தார் செய்வர் சிறப்பு.

புலவர். வ. சிவசங்கரன்,
எம். ஏ. பி. எட்.
திருக்கழுக்குன்றம்.

6. வெண்பா முதலியவை மெல்லஇனி வீழ்ந்து விடும்!
புண்பாவும் கொச்சைகளும் போந்துவிடும்—பண்பாய்க்
கழகத்தார் ஆய்ந்ததமிழ் கைத்துவிடும் மற்றேன்
உலகத்தார் செய்வர் சிறப்பு ?

தமிழ் மரபன்,
திருவொற்றியூர், சென்னை–19.

7. தூயநற் சிந்தை துணிவுள்ளம் தொண்டுணர்வு
காயம்மெய் யென்று கடனுற்றல்!—ஆய
கலையோ டொழுக்கம் கனிந்தவருக் கென்றும்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

இ. பொ. நடராசன்,
119, பெரியதெரு, திருவல்லிக்கேணி,
சென்னை–600005.

8. தண்டமிழைப் போற்றித் தரணியிலே வாழ்ந்துவிடு
'கொண்டவுயிர் செந்தமிழ்க்கே' கூறிவிடு—மண்டிச்
சிலைசெய்து பாராட்டிச் சீராட்டி இந்த
உலகத்தார் செய்வர் சிறப்பு.

''பூவரசு''
சாந்தி இல்லம்
தாராபுரம் சாலை, காங்கேயம் (அநி)
பெரியார் (மா வ) 638701.

9. புத்தரைப்போல் வள்ளுவர்போல் புண்ணியராம் ஏசுவைப்போல்
இத்தரையின் காந்தியைப்போல் ஏர்நபிபோல்—முத்துச்
சிலம்பினைப்போல் முத்தமிழின் செல்வம்போல் வாழ்ந்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

எம். ஏசுபாதம், பி. ஏ.,
45, சர்தார் பட்டேல் சாலை,
கிண்டி, சென்னை-600 032.

10. தன்னலத்தைப் பேணாமல் தாழ்ந்தோர் நலம்பேணி
மன்னுயிருக் கன்பராய் மாநிலத்தே—பன்னும்
இலக்கியச் சான்றோராய் என்றென்றும் வாழ்ந்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

புலவர். வெற்றியழகன்,
45, சர்தார் பட்டேல் சாலை,
கிண்டி, சென்னை-602 032

11\. அன்புணர்வும் நற்செயலும் ஆழ்ந்த கலைமனமும்
இன்முகமும் தம்வாயில் இன்சொல்லும்—என்றும்
விலகாமற் கொண்டொழுகி வீரமுடன் வாழ்ந்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

பாவலர் இடிமுரசு. பி. லிட்.,
அறிவுப் பண்ணை,
3, மயிலாப்பூரான் வீதி,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

12\. கல்வி விளக்கேற்றிக் காசினியில் தொண்டாற்றிக்
கல்லாமை, இல்லாமை, பொல்லாமை—இல்லா
உலகினையே காண உயிரைக் கொடுத்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

பாவலர்—தத்தனூர்—தமிழ்மணி, க. மு.,
தத்தனூர்,
திருச்சி மாவட்டம் 621 807

13\. உலகத் தமிழர் உறங்கிக் கிடக்கும்
கலக்கமிகு சூழலைக் காண்பீர்—கலங்கும்
இலங்கைத் தமிழரின் இன்னலைத் தீர்த்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு

அ. இருளப்பன் பி. ஏ., டிபிடி.,
பாண்டியன் போக்குவரத்துக் கழகம்,
பெரியாறு மின்திட்டம்-626525
மதுரை மாவட்டம்.

14\. நிறவெறி நீக்கவே நாடோறும் பாடுபட்ட
அறவண்ணல் கென்னடி, நன்மை—யறத்தை
உலகிற்குக் காட்டிய எம் காந்தி போன்றார்க்கே
உலகத்தார் செய்வர் சிறப்பு.

இரா. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
19 ஏ. சேர்வைக்காரன் தெரு,
கரந்தை.

15\. தன்னலத்தைப் பாராமல் தன்னுட்டைக் கண்போல
எந்நாளும் பேணுகின்ற ஏந்தலுக்கோர்—அன்புச்
சிலைவடித்துச் செய்கின்ற சீர்மையினைப் போற்றி
உலகத்தார் செய்வர் சிறப்பு.

கவிஞர் சேதரசு (M.A.) B. L., SC.,
இராஜபாளையம்-626 117.

16. உலகத்து நூல்களிலே ஓங்கும் வளத்தைப்
பலகற்றார் எல்லாரும் பாராட்டும் வண்ணம்
நலமாய்த் தமிழாக்கி நம்மொழியில் தந்தார்க்(கு)
உலகத்தார் செய்வர் சிறப்பு.

புலவர் வ. ச. வடிவேல் முருகன்,
எம். ஏ., பி. லிட்.,
77. சவுண்டம்மன் கோயில்தெரு, பழனி.

17. சங்கத் தமிழரைப்போல் சார்ந்தொன்றாய் வாழ்வோமேல்
எங்கெங்கும் நம்புகழே ஏற்றமுறும்!—இங்கே
கலகத்தார் நாமென்று காட்சிதந்தால் எவ்வாறு
உலகத்தார் செய்வர் சிறப்பு?

பாவலர் ப. ப. இராமசாமி,
பா. ப. பாளையம் 638 704.
பெரியார் மாவட்டம்.

18. இல்லாளாய் இல்லாள் இருந்தாலென்? என்றுமவள்
நல்லாளாய் வேண்டுமெனல் நன்றன்றோ?—பொல்லா
நலங்கெடுக்கும் தட்சிணையை நாமொதுக்கித் தள்ளின்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

சு. மீ. சுப்பையா,
பொன்னேரி,
செங்கை மாவட்டம்-601 204.

19. முடி வேண்டா; முத்தமிழே மூச்சென் றுரைத்த
படிஎழுந்தான் பாரோர்கள் போற்ற—வடித்தான்
சிலம்பதனை வள்ளலிளங்கோ அவனை ஒப்பார்க்(கு)
உலகத்தார் செய்வர் சிறப்பு.

புலவர் சேறை நேசன்,
சோனூர் (அஞ்சல்)
உதகமண்டலம்,
நீலகிரி.

20. கல்வியால் நல்லறத்தால் காணும் முயற்சியால்
சொல்வன்மை யால்உள்ளத் தூய்மையினல்—நல்லோய்!
கலக்கமே இல்லாக் கருத்தால் உயர்ந்தோர்க்(கு)
உலகத்தார் செய்வர் சிறப்பு.

மோ. அந்தோணிராசு,
பி. லிட்., நான்காம் ஆண்டு,
காந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை-2.

21. வாய்மை வசையில்லா வாழ்க்கை இவற்றுடனே
தூய்மை பெருமைசேர் தொண்டுள்ளம்—தோய்ந்த
இலக்கியமாய் இன்மொழியும் கொண்டார்க்கென் றென்றும்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

சார. செந்தில்குமார், பி. லிட்.,
கரந்தை, தஞ்சை-2.

22. தன்மொழியைத் தன்னாட்டைத் தன்னுயிரின் மேலாக
என்றென்றும் தன்வாழ்வில் எண்ணியே—பன்னாள்
இலங்கிச் சிறந்திடும் மானிடர் தம்மை
உலகத்தார் செய்வர் சிறப்பு.

உ. கோவிந்தராசன்,
பி. லிட்., நான்காம் ஆண்டு,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

23 குறள்நெறி பற்றிக் குடும்பம் நடத்திப்
புறநானூற் றின்வீரங் கொண்டு—மறவோற்
கிலக்கணமாய்க் கற்புநெறி மாருமல் வாழ்ந்தால்
உலகத்தார் செய்வர் சிறப்பு.

குடியாத்தம் தமிழ்த்தாசன்,
45, சர்தார் பட்டேல் சாலை,
சென்னை-32.

வெண்பாப் பரிசுப் போட்டி

ஆடித்திங்கள் வெண்பாப்போட்டிக்குரிய
ஈற்றடி:
கண்பெற்றார்க் குற்ற கடன்
வெண்பாக்கள் வந்து சேரவேண்டிய
இறுதி நாள்: **10-8-1982**

வேண்டுகோள் :

துணர் 56. மலர் 3. 1982 ஜுன்–ஜுலை இதழில் நேர்ந்துள்ள அச்சுப்பிழைக்கு வருந்துகிறோம். இன்றியமையாத சில பிழைகளின் திருத்தம் இங்கே தரப்படுகின்றது அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டுகிறோம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
122	20	கெர்ப்ப	— கொப்ப
122	28	வெள்ளயரானவர்	— வெள்ளையரானவர்
123	10	மேடையேரிச்சதுர்	— மேடையேறிச்சதுர்
		புரிவதிலும்	— புரிவதும்
123	26	கண்ணுய்க்கண்டு	— கண்ணுற்கண்டு
123	28	ஒலிகளின்	— ஒலிகளில்
124	9	முன்னதை	— முன்னவை
124	14	புதுமையான	— புதுமயான
124	27	பொருள்வரும்	— பொருள்தரும்
125	10	பன்னிருயிரும்	— பன்னீருயிரும்
125	14	எங்கனம	— எங்ஙனம்
128	3	நிறையசை	— நிரையசை
128	5	சுட்டப்பின்	— சுட்டிப்பின்
129	19	மொழிமரபால்	— மொழிமரபில்
130	11	பதின்னுறு	— பதினுறு
130	17	நோக்கும்	— நோக்கின்
131	15	ஞானேர்ச்சிதன்	— ஞானேர்ச்சிதன்
132	6	சந்திவர்க்கங்களினியல்பு	— சந்தியக்கரங்களினியல்பு
132	22	வன்புரை	— வன்புறை
132	32	(அஉ)	— (அவு)
133	6	ஐயிவனம்	— அயிவனம்
133	11	கயிலேயங்	— கயிலயங்
133	20	அனயயை	— அன்னயை
		அனயய்	— அன்னயய்
133	23	அன்னேயான்	— அன்னேயை யான்
133	27	அன்னையான்	— அன்னயையான்
133	30	ஓசையின்மையின்	— ஒன்று மின்மையின்
133	32	அகரந்திம்பர்	— அகரத் திம்பர்
133	33	கினே	— சினே
134	20	அம்	— அய்

139	15	மலிந்த நமலி	— மலிந்தது நமலி (நாமலி)
139	17	தகரம்	— நகரம்
139	31	கெவ்	— செவ்
140	18	எல்லாம்	— எல்லா
140	29	தருவும்	— தநவும்
141	9	பெருமையும்	— பெருமையும்
141	15	புராகிருதம்	— பிராகிருதம்
		நோக்கினல்	— நீக்கினல்
142	17	அம்யிடை	— அம்மிடை
142	21	திருவாளங்காடு	— திருவாலங்காடு
142	22	திருவாழம்பொழில்	— திருவாலம் பொ ழில்
		அணைத்திலும்	— அனைத்திலும்
142	34	வி	— பி.

இனிமைமிக்க தமிழ்.

பெருமைவாய்ந்த தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், திருவாய்மொழிபோலும் நூற்களாகிய மூல பண்டாரங்களை யுடையதும், முனிவரும் மன்னரும் முதலாய முன்னோர் பலரும் சுவைத்துச் சுவைத்து ஆராவின்ப நுகர்ந்து பலபடப் பாராட்டிப் போற்றி வந்ததும், என்றும் தன் இளமை யெழில் சிதையாது நின்று நிலவுவது மாகிய இனிமைமிக்க தமிழே நாமனைவரும் போற்றிப் பயில்வதற்குரியதும், நம்மை வளர்த்து உறுதியளிக்கும் தன்மை வாய்ந்தது மாகிய மொழியாம்.

நாவலர். ந. மு. வே.

உலா இலக்கிய மகளிர்--ஓர் ஆய்வு

அரங்க. நலங்கிள்ளி

உலா இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவன் உலா வரும் போது அவனது புற அழகினைக் கண்டு காதல் நோயுறும் பெண்கள் விலைமகளிர் எனவே இக்கால ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உலாக் காணும் மகளிர் விலை மகளிரா என ஆய்வதும், அவர்கள் விலைமகளிர் அல்லர் என நிறுவுவதும் இக்கட்டுரையின் நோக்கம்.

இனி உலாக் காணும் மகளிர் விலைமகளிரே என்பாரின் கூற்றினைக் காண்போம்.

''இது புரைதீர் காமத்திற்கன்றிப் பக்குநின்ற காமத்திற்குப் புறனடை கூறுகிறது. பக்கு நின்ற காமம் ஊரில் பொதுமகளி ரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண்திணைக்குரித்து என்று கூறு வர் ஆசிரியர். இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது''[1] என நச்சினார்க்கினியரும்,

''அக்காலச் சமுதாயச் சூழலில் குலமகளிர் இனம் பரத்தையர்இனம் என்ற பாகுபாடு இருந்ததையும், பரத்தையரை விரும்பி ஆடவர் தத்தம் மனைவியரைப் பிரிந்து செல்வர் என்பதையும் சங்க இலக்கி யம் முதலாக விறலிவிடு தூது இலக்கியம் வரை நாம் அறிகின் ரேம். எனவே, உலா இலக்கியங்களில் கூறப்பட்ட ஏழு பருவ மகளிர் குல மகளிர் அல்லர் பரத்தையரே என்று நாம் கொள்ள லாம்''[2] எனத் திரு. ந. வீ. செயராமனும்,

''உலாவைக் கண்டவரில் நிறையழிந்தவர் பரத்தையரே. குலமகளிர் உலாவைப் பார்த்தனராயினும் உலாச் சென்றவனை அரசன் என்ற அளவில்தான் நோக்கினர். பரத்தையரோ அவனோடு கூடப்பெறும் வாய்ப்புக் கிட்டாதா என்ற ஏக்கத்தோடு பார்த்த னர்''[3] எனத் திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் கூறு கின்றனர்.

மேற் குறிப்பிட்ட கூற்றுக்களெல்லாம் உலா இலக்கிய மகளிர் பரத்தையரே என்பதை வற்புறுத்துகின்றன.

உலா இலக்கியங்களில் தலைவனது உலாவைக் காணவரும் எழு பருவ மகளிரும் விலைமகளிரேயாயின் வீதியுலா வருகின்ற இறைவன் பரத்தையர் வீதியில் மட்டுந்தானு உலாப் போந்தான். ஊர்ப் பொதுத் தெருக்களில் செல்வதில்லையா? என்ற கேள்வி எழு கின்றது. அவ்வாறு பரத்தையர் வீதிக்கு மட்டும் இறைவன்

உலாப் போந்தான் என்று கூறினல் தசாங்கத்தில் கூறப்படும் தலைவனது சிறப்புக்கு இழிவு தேடித் தருவதுபோல் இருக்கின்றது. எனவே, உலாக்காணும் மகளிர் விலைமகளிரே என்பது பொருந்துவதாக இல்லை.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு முதல் உரையாசிரியரான இளம்பூரணர் உரையெழுதும்போது ''ஊரின்கண் காமப் பகுதி நிகழ்தலும் உரித்து என்று சொல்வர் புலவர் அது நிகழுங் காலத்து வழக்கொடு பொருந்தி நடக்கும் வகைமையின்கண், ஊரொடு தோற்றம் என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது வழக்கு. வகை யென்பது அவரவர் பருவத்திற்கு ஏற்பக் கூறும்வகைச் செய்யுள்''4 என்று கூறுகின்ருர். இதில் அவர் விலைமகளிர் குலமகளி என்ற எவ்வித வேறுபாட்டையும் குறிப்பிடவில்லை. ஆனல், இவருக்குப் பின் பதினைரும் நூற்ருண்டில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினர்க்கினியர் அவர் காலத்துச் சூழ்நிலையை மட்டுமே மனத்தில் கொண்டு உரை வரைந்துள்ளார் எனத் தெரிகின்றது. கி.பி. பதினைரும் நூற்ருண்டில் சோழர் கால அரசியலில் ஆங்காங்கே பெருங்கோயில்கள் எழுந்தன. அங்குத் தளிப்பெண்டிர் என்று கூறப்படுபவர்கள் -இறைவனுக்கெனப் பொட்டுக் கட்டி விடப்பட்ட கோயில் தாசிகள் என்போர்- மாடவீதிகளில் வாழ்த்திருக்க வேண்டும். அவர்கள் இறைவனே அல்லது அரசனே உலாவரும் போது மெய்ப்பாடு புலப்படும்படி வீதியுலாவைக்கண்டு காமுற்றிருக்கலாம். எனவே, இத்தகு சூழ்நிலையை வைத்துத்தான் நச்சினர்க்கினியர் உலா இலக்கியச் செய்யுட்களில் பாடப்படுகின்ற மகளிர் பரத்தையரே என்ற முடிவுக்கு வந்து தமது தொல்காப்பிய உரையிலும் குறிப்பிடுகின்ருர்.

இக்கருத்தே பின்னல் உலா இலக்கிய மகளிர் விலை மகளிர் எனும் கருத்திற்கு வித்திட்டுவிட்டது. ஆனல், நச்சினர்க்கினியர் காலம் முதற்கொண்டுதான் நமக்கு உள்ள நூல்கள் கிடைப்பதாக வைத்துக்கொண்டால் அக்காலச் சூழலையும் ஆசிரியர் உரைக்குறிப்பையும் ஏற்றுக்கொண்டு உலா இலக்கியங்களில் பேசப்படுகின்ற மகளிர் விலைமகளிரேயென ஒருவகையாகச் சமாதானம் அடையலாம். ஆனல், கி. பி. 8 ஆம் நூற்ருண்டு முதலே நமக்கு உலா நூல்கள் கிடைக்கின்றன. அப்போதெழுந்த திருக்கயிலாய ஞான உலாவான ஆதி உலாவிலே எழுவகைப் பெண்டிர் பகுப்பும் இறைவன் வீதி உலாவைக் கண்டு அம்மகளிர் காதல்கொண்ட முறையும் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளன. நச்சினர்க்கினியர் காலத்துக் கருத்தையே தொல்காப்பியத்திற்கும் ஆதி உலாவிற்கும்

ஏற்றி அவைகளில் குறிப்பிடுகின்ற மகளிரெல்லாம் விலைமகளிரே யென முடிவுகட்டுவது பொருத்தமாக இல்லை. எனவே, பரத்தையர் சமுதாயத்தினரை மட்டும் மனத்தில்கொண்டே உலா இலக்கிய மகளிர் படைக்கப்பட்டனர் என்பது ஏற்கக் கூடியதாக இல்லை.

உலா இலக்கியங்கள் தோன்றுதற்கு வித்தாய் அமைந்த பெருங்கதை இலாவாண காண்டத்தில் 'நகர்வலங்கண்டது' எனும் பகுதியில்

''கோலங் கொண்ட கோல்வளை மகளிருள்
ஞாலம் திரியா நன்னிறைத் திண்கோள்
உத்தம மகளிர் ஒழிய மற்றைக்
கன்னியர் எல்லாங் காமன் துரந்த
கணையுளங் கழியக் கவினழி வெய்தி''[5]

என்ற இவ்வரிகள் அமைகின்றன. இங்குக் கூறப்படுகின்ற உத்தம மகளிர் என்பவர் குலமகளிர் எனவும், மற்றைக் கன்னியர் என்பவர் விலைமகளிர் எனவும் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால், பெருங்கதைக்கு உரை வரைந்துள்ள உ. வே. சாமிநாத ஐயரோ, பெருமழைப்புலவரோ மற்றைக் கன்னியர் என்ற சொல்லுக்கு விலைமகளிர் எனக் குறிப்பிடவே இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட பரத்தையரே எனும் பொருள் வலிந்து ஏற்றுவ தாகவே தோன்றுகின்றது. இங்கு உத்தம மகளிர் என்பது உலா வரும் தலைவனின் பேரழகைக் கண்டபோது அவன்பால் மனம் செல்ல ஒட்டாது நிறைகாத்து இறைப்பற்றிலோ அல்லது அலங்கார அழகிலோ மட்டும் மகிழ்கின்ற திருமணமான பெண்டிர்களையே என்றும், மற்றைக் கன்னியர் என்பதற்குக் கன்னிமை கழியாத திருமணமாகாத பெண்களையே குறிக்கின்றார் என்பதே பொருந்தும். எனவே, தலைவன் வீதி உலாவின்போது மனத்தைப் பறிகொடுக்கும் பெண்டிரெல்லாம் விலைமகளிரேயென முடிவு செய்வது பொருந்து வதாக இல்லை.

மேலும், 'பெருங்கதை' 'நகர்வலங்கண்ட படலத்தில்' ''உதயண குமாரனைக் காண்டல் விரும்பாதே கொண்மின்; அங்ஙனம் விரும்புதல் மாட்சிமையுடைய தாகாது என்று செவிலித் தாயர் இடையறாது தடுக்கவும்''[6] எனவரும் உரைப்பொருளை ஆராய்வோமாயின் பரத்தையர்குலப் பெண்டிராயின் அவர்தம் செவிலித்தாயர் உலாவைக் கண்டு காமுறுதல் மாட்சிமையாகாது எனக் கூறுதற்கில்லை. எனவே, பெருங்கதை ஆசிரியரும் பரத்தை யரை மனத்தில் வைத்துப் பாடவில்லை எனத் தெரிகின்றது.

இன்னும் உலா இலக்கியங்கட்கு இலக்கணம் வகுக்கின்ற பாட்டியல் நூல்கள் ஒன்றுகூட உலா இலக்கிய மகளிர் பரத்தையர் என்று குறிப்பிடவில்லை. உலா இலக்கியங்களிலும் பரத்தையர் என்ற குறிப்பு இல்லை.

உலா இலக்கிய மகளிர் பரத்தையரே எனக் கொள்வோமாயின் திருக்குற்றாலநாதருலாவில் எழுபருவ மகளிரையும், வரையரமகளிருள் பேதையர் நாகப்பெதும்பையர், மானிட மங்கையர், தேவமடந்தையர், பாதாளலோக அரிவையர், நீரரமகளிருள் தெரிவையர், கானகத்தைச் சேர்ந்த பேரிளம் பெண்டிர் என இவ்வெழுவகை மகளிரும் நின்று இறைவன் மீது மையல் கொண்டனர் என்று பாடுகின்றது. இம்முறையைப் பார்க்கும்போது ஆசிரியர் வருணித்த இம் மகளிரெல்லாம் பரத்தையரா?

ஆக, இறுதியாக நிற்கும் கேள்வி, உலா இலக்கியங்களில் பேசப்படுகின்ற மகளிர் குலமகளிரா அல்லது விலைமகளிரா அல்லது கற்பனை மகளிரா என்பதே யாகும். கற்பனை மகளிர் என்பதே பொருந்துவதாக உள்ளது. ''சேரமான் பெருமாள் நாயனுர் தமது காலம் வரையில் இருந்த மன்னர் உலாவரும் போது மங்கைப் பருவத்து நங்கையர் மட்டுமே காதலித்ததாகக் தலித்தனிச் செய்யுளாகப் பாடும் பொதுநெறியை மாற்றிச் சிவபிரான் உலா வந்ததாகவும், அவ்வுலாவில் பேதை முதல் பேரிளம்பெண் இறுதியாக உள்ள மாதர்கள் எல்லாம் காதல் கொண்டதாகவும் கருத்தமைத்து நெடிய கலிவெண்பாட்டால் செய்யும் புதுநெறியை உண்டாக்கினுர்'' எனும் ச. வேங்கடராமச் செட்டியாரின் கூற்றும் மேற்கூறிய கருத்தை உறுதி செய்கிறது.

உலாக் காணும் மகளிர் குல மகளிரா விலை மகளிரா என்பதை விட உலா இலக்கிய ஆசிரியன் பாட்டுடைத்தலைவன் மீதுகொண்ட பக்தி மேலீட்டால் இவ்வாறு ஒரு பகுப்பு முறையைக் கையாண்டான் என முடிவு கொள்வதே சிறந்ததாகும்.

குறிப்புகள் :

1. தொல்காப்பியம் (பொருள்) நச்சினார்க்கினியர் உரை, புறத். பக். 307, 309.
2. உலா இலக்கியங்கள். ந. வீ. செயராமன். பக். 34, 35.
3. பெருங்கதை ஆராய்ச்சி. சிலம்பொலி செல்லப்பன். பக். 286
4. தொல்காப்பியம் (பொருள்) இளம்பூரணம். பக் 139-140.
5. கொங்குவேளிர் பெருங்கதை 5, 3, 53–57.
6. மேலது. பெருமழைப்புலவர். ப. 126.
7. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்-1. ச. வேங்கடராமச் செட்டியார். 'உலா'. பக். 130-131.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனர்**,
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்**, எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்**,
367, மேலவீதி,
தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்**,
கரந்தை,
தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்**, எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனர் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்**, பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு		வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	...	030—00
2.	தனி இதழ்	... 02—00		
3.	ஆயுள் வரி	... 250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தாந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, கரந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.